விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 058 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 03 வியாழக்கிழமை (15.02.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## துப்பாக்கி வெடித்ததில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

### முல்லையில் காட்டுக்குள் வேட்டைக்கு சென்ற வேளை சம்பவம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு குமுழமுனை தண்ணிமுறிப்பு காட்டுப்பகுதியில் வேட்டைக்கு சென்ற குடும்பஸ்தர் ஒருவர் சட்டவிரோத துப்பாக்கி வெடித்ததில் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை வேளை இடம்பெற்றுள்ளது.

இதில் முல்லைத்தீவு ஆறுமுகத்தான் 15

## இணுவிலில் புகையிரதத்துடன் வான் மோதி கோர விபத்து

### தந்தை, 6 மாத குழந்தை உயிரிழப்பு




(யாழ்ப்பாணம்)

இணுவில் கிழக்கு புகையிரதக் கடவையில் ரயிலும் வானும் மோதி விபத்துக்குள்ளானதில் தந்தை மற்றும் அவரது 6 மாத குழந்தை உயிரிழந்துள்ளனர். 15

# சூழ்ச்சிகளை முறியடித்து தமிழரசுக் கட்சியின் மாநாட்டை நடத்துக

### சிறீதரனிடம் சம்பந்தன் அறிவுறுத்தல்



*(கொழும்பு)* உட்கட்சி ஜனநாயகத்தை சிதைக்கும் வகையில் நடைபெறும் சூழ்ச்சிகளை முறியடித்து உடனடியாக தமிழரசுக் கட்சியின் மாநாட்டை நடத்துமாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சிவஞானம் சிறீதரனுக்கு அறிவுறுத்தியுள்ளார். *(15ஆம் பக்கம் பார்க்க)*

## சுகாதார தொழிற்சங்கங்கள் பணிப் பகிஷ்கரிப்பை கைவிடத் தீர்மானம்

(கொழும்பு)

சுகாதாரத் தொழிற்சங்கங்கள் ஆரம்பித்த தமது தொடர்ச்சியான பணிப் பகிஷ்கரிப்பை இன்று காலை 06.30 மணி முதல் கைவிட தீர்மானித்துள்ளதாக சுகாதார தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அதன்படி, எதிர்வரும் திங்கட்கிழமை 19ஆம் திகதி சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன 15




### நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம்

## திருத்தங்களுடன் நிறைவேற்றப்படும்வரை தொடர்ந்து அமுலில் இருக்கும்

### நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ



(கொழும்பு)

நிகழ்நிலை பாதுகாப்பு தொடர்பான சட்டமூலம் திருத்தங்களுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் வரை அமுலில் இருக்கும் என நீதியமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள் 15

## அபு தாபியில் இந்துக் கோவிலை திறந்தார் பாரத பிரதமர் மோடி



15

### இணையச் சட்டத்தால்

## முதலீடுகள் தடைப்படும்

### சமந்தா பவர் ஜனாதிபதியிடம் தெரிவிப்பு



10

## கட்டுப்பாட்டை இழந்த இ.போ.ச பஸ் நாவற்குழியில் விபத்து



15

## நயினாதீவு இளைஞன் பாங்கொக்கில் மரணம்

### ஏரியில் நீராடியபோது துயரம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவைச் சேர்ந்த தற்போது இலண்டனில் வதியும் இளைஞர் ஒருவர் தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் உள்ள ஏரியில் நீராடியபோது உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் கௌரிபாலன் சங்கமன் (வயது-24) என இனங்காணப்பட்டுள்ளார்.


இலண்டனிலிருந்து தாய்லாந்துக்குச் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்

தோற்றம்
1944 - 11 - 16



மறைவு
2024 - 02 - 14

## கபிரியேல்பிள்ளை சிறில்சேவியர்

மாத்தளையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி இளவாலையினை வதிவிடமாகவும் தற்போது இல.51, கோணாவில், கிளிநொச்சியில் வசித்து வந்தவருமாகிய கபிரியேல்பிள்ளை சிறில்சேவியர் அவர்கள் 2024.02.14 நேற்று புதன்கிழமை கலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆன்மேரி மனோரஞ்சிதம் அவர்களின் அன்புக் கணவரும் கிறிஸ்டீன் பானுமதி(இலங்கை வங்கி, கிளிநொச்சி) அவர்களின் பாசமிகு தந்தையும் பாலகிருஸ்ணன் அகிலன்(நீர்ப்பாசன திணைக்களம் - வவுனிக்குளம்) அவர்களின் பாசமிகு மாமனாரும் அஹர்ஷிகா, அனன்யா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது பூதவுடல் அவரது இல்லத்தில் ஆராதனைக்கு வைக்கப்பட்டு 2024.02.15 இன்று மதியம் 1.00 மணியளவில் புனித செபஸ்தியார் ஆலயம் கோணாவிலில் திருப்பலி நடைபெற்று புனித செபஸ்தியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இல. 51,
கோணாவில்,
கிளிநொச்சி.

*தகவல்:*
குடும்பத்தினர்
077 736 4097

(19122)

## உலகத்துடன் பொருந்தக்கூடிய கல்வி முறை அவசியம் - ரணில்

நாட்டை பொருளாதார மாற்றத்திற்கு இட்டுச்செல்ல வேண்டுமாயின். உலகத்துடன் பொருந்தக்கூடிய புதிய கல்வி முறைமை அவசியம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களுக்கு இலவச பாடப்புத்தகங்கள். சீருடை வழங்கும் தேசிய நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்க வெளிநாடுகளுக்கு சென்று யாசகம் பெற வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் மாணவர்களுக்கு நாட்டில் சிறந்த எதிர்காலத்தை உருவாக்கவே தான் அதனை செய்ததாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பொருளாதார மறுசீரமைப்புகள் மூலம் சிறந்த பொருளாதாரத்தை உருவாக்கி. வெளிநாடுகளிடம் பெற்ற கடன்களை மீள செலுத்தும் நிலையை உருவாக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

அந்நியச்செலாவணி பற்றாக் குறை தொடர்ந்தும் நிலவுவதால், உலக சந்தையுடன் இணைந்து. ஏற்றுமதிகளை அதிகரிக்க வேண்டும் என ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.(ம-7)

## நினைந்து உருகுகின்றோம்

தமிழ்க்கோவிலின் மணிக்குன்று!
சிந்து நடைக்கூத்தின் சிங்காரககாவலன்!
இல்லத்தில் திங்களில் தமிழறிஞர்களோடு
தமிழாய்ந்த கலைமாமணி

அமரர் **த.கலாமணி**

காலமான செய்தி அறிந்தோம்
கலங்குகின்றோம்! கலங்கும் உறவுகளுடன்
எங்கள் உணர்வுகளைப் பகிர்ந்துகொள்கின்றோம்.

**சதாவதானி கதிரைவேற்பிள்ளை**
**சனசமூக நிலையத்தினர்**
**தம்பசிட்டி,**
**புலோலி மத்தி.**

(19124)


## வேலையாள் தேவை

கனடா & UK Visa செய்யும் அலுவலகத்திற்கு கணனி அறிவுடைய வரும். ஆங்கில அறிவு உள்ள A/L படித்த பெண் வேலையாள் தேவை. (19119)

**Expo Net Overseas Consultants**
345, Kasthuriyar Road, Jaffna.
021 222 5686
071 415 0995, 021 435 5113


## காணவில்லை

யாழ். சுண்டுக்குளி பகுதியில் கறுப்பு, மண்நிறம் கலந்த ஆண் பொம்மேரியன் நாயைக் காணவில்லை. கண்டவர்கள் தயவுடன் தொடர்பு கொள்ளவும். (தகுந்த சன்மானம் வழங்கப்படும்)

**076 86 54 165**

(19120)

# மரண அறிவித்தல்

தோற்றம்
31 - 12 - 1937



மறைவு
14 - 02 - 2024

## சிவஸ்ரீ வேலாயுதக்குருக்கள் இராமலிங்கக்குருக்கள்

### (மாந்திரிக பூசணம்)

சங்கரத்தை வட்டுக்கோட்டை முருகன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதக் குருக்கள் இராமலிங்கக் குருக்கள் அவர்கள் 14.02.2024 நேற்று புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

எல்லோராலும் அன்பாக சங்கரத்தை ஐயா என்றழைக்கப்படும் மாந்திரிக பூசணம் சிவஸ்ரீ வே.இராமலிங்கக்குருக்கள் அவர்களின் இறுதிக்கிரியைகள் (15.02.2024) வியாழக்கிழமை இன்று காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மதியம் 1.00 மணியளவில் வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

முருகன் கோவிலடி,
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

*தகவல்:*
குடும்பத்தினர்
077 809 6445

(C-8355)

# மரண அறிவித்தல்



## அழகம்மா கனகசபாபதி குருக்கள்

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் முரசுமோட்டை முருகன் கோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட அழகம்மா கனகசபாபதி குருக்கள் அவர்கள் நேற்று 14.02.2024 புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் அமரர் முரசுமோட்டை சிவசுப்பிரமணிய தேவஸ்தான முன்னாள் பிரதமகுரு சிவஸ்ரீ கனகசபாபதி குருக்கள் அவர்களின் துணைவியாரும் காலஞ்சென்றவர்களான துரைசாமி ஐயர், கந்தசாமி ஐயர், சொர்ணாம்மா ஆகியோரின் சகோதரியும் அமரர் நாகபூசணி மற்றும் கமலாதேவி(ஓய்வு நிலை ஆசிரியர்), அமரர் ரகுநாதக்குருக்கள் (அதிசய விநாயக ஆலய பிரதம குரு விசுவமடு) மற்றும் காந்தி(ஓய்வுநிலை ஆசிரியர்), கிருஷ்ணானந்த குருக்கள் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவஸ்ரீ சோமசுந்தரக் குருக்கள், ருக்மணிபாமா, பாலச்சந்திர சர்மா கிரிசாம்பாள் ஆகியோரின் மாமியாரும் குமுதா உமாகாந்தன் (ஆசிரியர்), அமரர் கேசவ சர்மன் மற்றும் வாச குருக்கள் ரதீபா (முரசுமோட்டை முருகனாலய பிரதம குரு), தனுசா(இந்தியா), அனுசா, யதுசான் (ஆசிரியர்), கிரிவாசன், கிரிசுதன் ஆகியோரின் பேத்தியும் அர்ச்சனா, தீக்சனா, அனசிறி, ஸ்ரீலயா, ஸ்ரீவக்சன், ஜெஜ்னி, யாகர்ணி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (15.02.2024) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முரசுமோட்டை ஐயன் கோவிலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

*தகவல்:*
குடும்பத்தினர்

(C-8354)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்மையாக்கும் முகப்பூச்சுகளால் அதிகரிக்கும் நோயாளர்கள்

## எச்சரிக்கை விடுக்கும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

**நாட்டில் தீங்கு விளைவிக்கும் அழகுசாதனப் பொருட்களைப் பயன்படுத்துவதால் பக்கவிளைவுகளுடன் பொது மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.**

குறிப்பாக உள்ளூர் சந்தையில் இவ்வாறான தயாரிப்புகள் பயன்படுத்துவதனை கட்டுப்படுத்துவது பாரிய சவாலாகியுள்ளதென அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அழகுசாதனப் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் மருந்து சட்டம் நீக்கப்பட்டுள்ளதுடன், விதிமுறைகள் இல்லாததால் இந்த நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

அழகுசாதனப் பொருட்களின் பயன்பாடு காரணமாக பக்கவிளைவுகளுடன் அரசு மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கை, பெரும்பாலும் இளைஞர்களிடையே அதிகரித்து வருவதாக தெரியவந்துள்ளது.

அவற்றில் அதிக எண்ணிக்கையிலான தயாரிப்புகள் தீங்கு விளைவிக்கும் வெண்மையாக்கும் கிரீம்கள் மற்றும் அழகுசாதனப் பொருட்களாகும்.

ஒவ்வாமை என்பது மரணத்தைக் கூட ஏற்படுத்தும்.



இதனால் அவற்றினை பயன்படுத்தும் மக்களை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.(நி-5-6)

# 2100 கிராம உத்தியோகத்தர்கள் புதிதாக சேவையில்

(கொழும்பு)

நாட்டில் தற்போது சுமார் 2,800 கிராம உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடம் நிலவுகின்ற நிலையில், புதிதாக கிராம உத்தியோகத்தர்களை சேவையில் இணைத்துக் கொள்வதற்கான நேர்முகத் தேர்வுகள் அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ளதாக உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, 2100 கிராம உத்தியோகத்தர்கள் புதிதாக சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் அஷோக பிரியந்த தெரிவித்துள்ளார்.

கிராம உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்வது தொடர்பில், அண்மையில் நடைபெற்ற போட்டி பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய நேர்முகத் தேர்வுகளுக்கான அழைப்பு கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். (நி-5-6)

# நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை இரத்து செய்வது சாத்தியமற்றது - பிரதீபா மஹாநாம

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை மையை இரத்து செய்ய வேண் டுமாயின் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான் மையுடன், மக்கள் வாக்கெ டுப்புக்கும் செல்ல வேண்டும்.

ஆகவே நிறைவேற்று அதி காரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இரத்து செய்வது தற்போது சாத்தியமற்றது என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் பிரதீபா மஹாநாம தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தி னம் செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை மையை இரத்து செய்வது தற்போதைய பிரதான பேசுபொருளாக காணப்படுகிறது. 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் நடத்தப்படும் என்று குறிப்பிடப்படுகிறது.

அரசியலமைப்பின் பிரதான அம்சமாக காணப்படும் நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்ய வேண்டுமாயின் பாராளு மன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன், மக்கள் வாக்கெடுப்புக்கும் செல்ல வேண்டும்.

1994 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஆட்சிக்கு வந்த அரச தலைவர்கள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்வதாக மக்களுக்கு வாக்குறுதி வழங்கினார்கள்.

ஆனால் வழங்கப்பட்ட வாக் குறுதிகள் நிறைவேற்றப்பட வில்லை. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நிறைவேற்று அதி காரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இரத்து செய்வ தற்கு இரண்டு முறை பாராளு மன்றத்தின் ஊடாக நடவடிக்கைகளை முன்னெடுத்தார். ஆனால் அந்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை.

ஜனநாயகத்தை முன்னி லைப்படுத்தி செயற்படும் பெரும் பாலான நாடுகளில் நிறை வேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமை தற்போது நடை முறையில் இல்லை.

பாராளுமன்றத்தை முன்னி லைப்படுத்திய அமைச்சரவை தலைமையிலான அரசாங்கங்கள் தான் தற்போது செயற்பாட்டில் உள்ளது. ஆகவே நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இரத்து செய்வது சிறந்தது.

தற்போதைய பாராளுமன்றத்தின் மக்களாணை கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. மூன்றில் இரண்டு பெரும்பான்மை சாத்திய மற்றது.

ஆகவே தற்போதைய நிலையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இரத்து செய்வது சாத்திய மற்றது என அவர் தெரிவித்தார். (நி-5-6)




## மணிவிழா வாழ்த்து

06.01.2020 தொடக்கம் எமது பாடசாலையில் விஞ்ஞான பாட ஆசிரியராக அர்ப்பணிப்புடன் கடமையாற்றி 15.02.2024 இன்று சேவையிலிருந்து ஓய்வு பெறும் சிரேஷ்ட ஆசிரியை

**திருமதி. ஜெகசோதி இராஜமகேந்திரன்** (SLTS-I)

அவர்களது ஓய்வுக்காலம் சிறக்க உளமார வாழ்த்துகின்றோம்.

**சேவை விபரம்**

- கிளி/முரசுமோட்டை முருகானந்தா மகாவித்தியாலயம் 06.04.1985-05.02.1991
- யா/பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை 06.02.1991-28.02.1993
- கிளி/இராமநாதபுரம் மகாவித்தியாலயம் 01.03.1993-02.05.2000
- கிளி/வட்டக்கச்சி மகாவித்தியாலயம் 03.05.2000-04.05.2003
- யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி 05.05.2003-17.02.2010
- யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி 18.02.2010-05.01.2020
- யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம் 06.01.2020-15.02.2024



வாழ்த்துவோர்:- ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்.

(19115)




(19116)

பாணந்துறை ஜீலான் மத்திய நவோதய கல்லூரியில் ஆங்கில மன்றத்தின் ஏற்பாட்டில் ஆங்கில தின விழாவில் வெளியிடப்பட்ட சஞ்சிகையை கல்லூரியின் ஆங்கில மொழி ஒருங்கிணைப்பாளர் நஸ்மினா நிலார் அவர்கள் பழைய மாணவிகள் சங்க செயலாளர் யாழ் பஸ்னா இக்பாலுக்கு கையளிப்பதையும் பிரதம அதிதியாக வருகை தந்த களுத்துறை மாவட்ட ஆங்கில மொழி பிரதி பணிப்பாளர் திருமதி. இனோகா வீரசிங்க, கல்லூரி அதிபர் ஏ.எம்.ஹலீம் மஜீத் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சம்பியனானது கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி





ஆட்டநாயகன் லக்சிகன்

நாவாந்துறை சென்நீக்கிலஸ் வெற்றிக் கிண்ணத்தினை கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி கைப்பற்றியுள்ளது.

யாழ்.லீக் அனுமதியுடன் நாவாந்துறை சென்நீக்கிலஸ் விளையாட்டு கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான அணிக்கு 7 நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சென்நீக்கிலஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இவ்இறுதிப் போட்டியில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதியது. ஆரம்பம் முதல் இரு அணிகளும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.


தொடராட்ட நாயகன் ஆர்த்திகன்

கோல் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு ஆடிய இரு அணிகளும் எதிரணி கோல்பரப்பை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தன. அதன் பயனாக 9ஆவது நிமிடத்தில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணிக்கு பெனால்டி வாய்ப்பு கிடைக்க அதனை சரியான முறையில் பயன்படுத்திய அவ் அணி வீரர் சுஜாஸ்கான் கோலைப் பதிவு செய்ய அடுத்த நிமிடமே றோயல் அணிக்கும் பெனால்டி வாய்ப்பு கிடைக்க அதனை றோயல் அவ் அணியின் வீரர் கோபன் கோலாக மாற்ற இடை வேளைக்கு முன்னர் 1:1 என்ற கோல் கணக்கில் இரு அணிகளும் சமநிலை வகித் தனர்.

இரண்டாம் பாதி ஆட்டத்தின் 34ஆவது நிமிடத்தில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணியின் பின்கள வீரன் லக்சிகன் நீண்ட தூரத்தில் இருந்து உதைத்து சற்றும் எதிர்பாராத கோலைப் பதிவு செய்தார். ஆட்ட நேர முடிவில் கொற் றாவத்தை றேஞ்சஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாக முடிசூட்டிக் கொண்டது.

ஆட்ட நாயகனாக றேஞ்சஸ்அணிவீரர் லக்சிகன் மற்றும் தொடராட்ட நாயகனாக றேஞ்சஸ் அணி வீரர் ஆர்த்திகன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(நி-5.6.90)


## கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

1. தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் அவர்கள் தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணைகளில் விபரிக்கப்பட்டவாறு கோருகின்றார்.
2. இக்கேள்வி கோரலானது தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கோரப்படுகின்றது.
3. இக்கேள்வியானது பொருத்தமான வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை கொண்டுள்ளதும், கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாதது மான கேள்விதாரருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப் படுத்தப்பட்டுள்ளது.
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் எனும் முகவரியில் 2024.02.15ம் திகதி தொடக்கம் 2024.02.28ம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப 09.00 தொடக்கம் பி.ப 03.00 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1,000.00 (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, நகல்பிரதி என தனித்தனி உறைகளிட்டு தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் எனும் முகவரிக்கு 2024.02.29 திகதி அன்று மு.ப 10.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, யாழ்.வீதி மானிப்பாய் எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் 021 225 5381, 021 225 6649) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
7. கேள்வி தொடர்பான இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் பெறுகைக்குழுவிற்கே உரியது.

| இல. | கேள்வி எண் | தேவைப்படும் அளவு | | பொருள் வழங்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| 01 | NP/14/41(16)/2/P/SP/2023-04 பொருளாதார ரீதியில் வசதி குறைந்த மாற்றுத் திறனாளிகளுக்கான சத்துணவு வழங்கல் திட்டம் | தீட்டற்பச்சை அரிசி | 1,935 Kg | கொள்வனவுக் கட்டளை வழங்கிய நாளிலிருந்து 15நாட்கள் (கோரப்படும் அளவுகளில் பொதி செய்து வழங்கப்பட வேண்டும்.) |
| 02 | | பயறு | 332.5 Kg | |
| 03 | | கடலை | 645 Kg | |
| 04 | | உழுந்து | 483.75 Kg | |

**தலைவர்**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்** 2024.02.15 (C-8383)



## நல்லூர் பிரதேச சபை
## ஏல விற்பனை அறிவித்தல்

**இடம்** : தலைமை அலுவலகம் - நல்லூர் பிரதேச சபை.
**காலம்** : 26.02.2024 திங்கட்கிழமை மு.ப 10.30
**ஏலப்பொருட்கள்** : பாவித்த அலுவலகப் பொருட்கள், தளபாடப் பகுதிகள், இரும்புப் பொருட்கள், பிளாஸ்ரிக் குழாய்கள், பழைய தகரங்கள், கண்ணாடித் தொகுதிகள், வளை மரங்கள், விறகு, பழைய பற்றிகள், மின் பாவனைப் பொருட்கள், தார் வெற்று பரல்கள், ரயர் வகைகள்

ஆர்வமுள்ளோர் ஏலப்பொருட்களை 20.02.2024, 21.02.2024ஆம் திகதிகளில் மு.ப 9.30 - பி.ப 3.00 மணிக்கிடையில் தலைமை அலுவலகத்திலும், வெற்று பரல்களை 22.02.2024 மு.ப 9.30 - பி.ப 3.00 மணிக்கிடையில் நல்லூர் பிரதேச சபைக்கு சொந்தமான பலாலி வீதி 2ம் ஒழுங்கையில் அமைந்துள்ள 2ம் ஆதனத்தில் பார்வையிட்டு 26.02.2024ம் திகதி மு.ப 10.30 மணிக்கு நடைபெறும் ஏலத்தில் கலந்து கொள்வதற்கான விண்ணப்பத்தை மு.ப 8.30 - 10.15 வரை கட்டணம் செலுத்தி உரிய விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பித்து ஏலத்தில் கலந்து கொள்ளலாம் என்பதுடன், ஏலத்தில் சித்தி பெறுவோர் அதற்கான பெறுமதியினை உடன் செலுத்தி அன்றையதினம் மாலை 3.00 மணிக்கு முன்பாக பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

**செயலாளர்,**
நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.
021 222 2700

(C-8325)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத் கீதை மஹோற்சவம் இலங்கையில்

(கொழும்பு)

சர்வதேச ஸ்ரீமத் பகவத் கீதை மஹோற்சவத்தை இம்முறை இலங்கையில் நடத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது

குறித்த விடயம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

இந்து பக்தர்களின் புனித நூலாகக் கருதப்படும் ஸ்ரீமத் பகவத் கீதை தொடர்பாக சமய நிகழ்வுகள் மற்றும் மதிப்பளித்தலை வழங்குவதற்காக இந்தியாவின் ஹரியானா மாநில குருப்பிரிவு அபிவிருத்தி சபையால் வருடாந்தம் பகவத் கீதை மஹோற்சவம் நடத்தப்படும்.

அண்மைய ஆண்டுகளில் குறித்த மஹோற்சவம் வெளிநாடுகளில் நடத்தப்பட்டுள்ளதுடன், 2024 ஆம் ஆண்டின் சர்வதேச ஸ்ரீமத் பகவத்கீதை மஹோற்சவத்தை இலங்கையில் நடத்த முன்மொழியப்பட்டுள்ளது.

இதற்காக புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்நிலையில், இந்த மஹோற்சவம் மார்ச் முதலாம் திகதி முதல் மார்ச் 3 ஆம் திகதி வரை கொழும்பு தாமரைத் தடாக வளாகத்தில் நடைபெறவுள்ளது. (நி-5-6)

# ரயில் விபத்தில் முதியவர் உயிரிழப்பு

(கண்டி)

கண்டி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அஸ்கிரிய பிரதேசத்தில் ரயில் விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

75 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் தொடர்பான தகவல்கள் இதுவரை கண்டறியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தளையில் இருந்து கண்டி நோக்கி பயணித்த ரயிலில் மோதியே இவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் கண்டி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கண்டிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-5-6)

# விசேட சுற்றிவளைப்பில் 759 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் கீழ், நேற்று அதிகாலை 12.30 உடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 759 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கைதானவர்களில் போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய 549 பேரும் குற்றப் பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ள பட்டியலில் உள்ள 210 பேரும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதான சந்தேகநபர்களில் 8 பேர் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பணியகம் மற்றும் பொலிஸ் விசேட பணியகம் ஆகியவற்றின் பட்டியலில் உள்ளவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் 4 பேர் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்கப்பட்டு வருவதுடன், 6 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், இந்த நடவடிக்கைகளின்போது 135 கிராம் ஹெரோயின், 87 கிராம் ஐஸ் ரக போதைப்பொருள், 25 கிலோ கஞ்சா, 50 ஆயிரத்து 849 கஞ்சா செடிகள் மற்றும் 1,545 போதை மாத்திரைகள் உள்ளிட்ட மேலும் பல சட்டவிரோத போதைப் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.(நி-5-6)

# சஜித்துடன் கைகோர்க்கிறார் அதிரடிப்படையின் முன்னாள் தலைவர்

(கொழும்பு)

விசேட அதிரடிப்படையின் முன்னாள் தலைவர் நிமல் லெவ்கே, ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ளதாக கட்சி அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதன்படி நேற்று ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் வைத்து உத்தியோகபூர்வமாக கட்சியில் இணைந்துள்ளார்.

இதன்போது கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் இருந்து கட்சி உறுப்புரிமையையும் பெற்றுக்கொண்டார். பாதுகாப்புத் துறையில் பணி புரிந்து ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்த மூன்றாவது உயர் அதிகாரியாக இவர் காணப்படுகின்றார். (நி-5-6)

# இலங்கையில் 5 G சேவையை வழங்குவதில் சிக்கல்

(கொழும்பு)

இலங்கையில் 5G தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்வது தொடர்பில் நிச்சயமற்ற தன்மை நிலவி வருவ தாக தெரிவிக்கப்படுகின்றது.

5G தொழில்நுட்ப சேவையை வழங்குவதற்கான உட்கட்டுமான வசதிகளை ஏற்படுத்துவதில் பல் வேறு இடர்பாடுகள் காணப்படுவதாக கூறப்படுகின்றது.

இதனால் எப்பொழுது இலங்கை யில் 5G தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்படும் என்பது பற்றிய தகவல்களை வெளியிட முடியாத நிலைமை உருவாகியுள்ளது. உட்கட்டுமான வசதிகளை ஏற்படுத்துவதற்கு பெருமளவு செலவுகள் ஏற்படும் என தொழில் நுட்ப அமைச்சு தெரிவித்துள்ளது.

எவ்வாறெனினும், அரசாங்கமும் தொலைதொடர்பு நிறுவனங்களும் இந்த சேவையை வழங்குவதில் ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நாடு முழுவதிலும் உட்கட்டுமான வசதிகளை ஏற்படுத்துவதற்கு பாரியளவில் முதலீடு செய்ய நேரிடும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி-5-6)


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்.மதுரைமீனாட்சி பரராசசிங்கம் (மீனா)

மலர்வு 22.11.1951

உதிர்வு 08.03.2022

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வமாகிவிட்ட
எங்கள் குடும்ப விளக்கே!
இன்றும் உங்கள் வழிகாட்டலே
இவ்வுலகில் எம்மை வாழ வைக்கின்றது
விண்ணிலிருந்து எமக்கு
வழிகாட்டுவீர்கள் என்ற
நம்பிக்கையுடன் நாம்.

(19000)

111/4, நடராசா வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்
குடும்பத்தினர்.


# இராசிபலன்

15.02.2024
மாசி 03, வியாழக்கிழமை
சஷ்டி பிற்பகல் 4.41 மணிவரை
அச்சுவினி பிற்பகல் 3.31 மணிவரை

சுபநேரம் -8.03-9.33 மணிவரை
இராகுகாலம்-2.03-3.33 மணிவரை
சஷ்டி விரதம்

சந்திராஷ்டமம்
பூரம், உத்தரம்.

வளவன்




பணியில் சிறு மன உளைச்சல் ஏற்டலாம், எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், கனவு பலிதமுண்டு, கற்பனை மிகுதியான நாள்.




குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், தொட்ட காரியங்கள் கைகூடும், செய்தொழில் மேன்மையுண்டு.




கும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், எதிர்பார்த்த வருமானம் வந்து சேரலாம், வெளியூர் பயணங்களால் நன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு.




பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும்.




தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், சேமிப்பில் சிறிது கரையலாம், ஊர்மாற்றம், இடமாற்றம் என்பன இடம்பெறலாம், சயன சுகக் குறைவான நாள்.




சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், பேச்சில் இனிமை தென்படும், வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் கைகூடும்.




திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பொதுவாழ்வில் புகழ் கூடும்; புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.




முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பெல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், வழிபாடு முன்னேற்றம் தரும்.




எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், மற்றவர்கள் பாராட்டும் வகையிலான செயலொன்றைச் செய்யும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.




நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.





எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், தொழிலை விரிபுபடுத்தும் எண்ணம் மேலோங்கும் நாள்.

நற்பணியே தனக்குத்தானே பரிசாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுவேலி வீடொன்றில் திருடிய சந்தேகநபர் கைது

## களவாடப்பட்ட பொருட்களும் மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.அச்சுவேலி பகுதியிலுள்ள வீடொன்றில் பல பெறுமதியான பொருட்களை களவாடிய சந்தேகநபரை பொலிஸார்ஒருமணித்தியாலத்தில் கைது செய்த னர்.

அச்சுவேலிப் பகுதியை சேர்ந்த 25 வயதான நபரே பொலிஸாரால் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

அச்சுவேலி பகுதியில் வெளிநாட்டில் இருந்து வந்த நபரொருவரின் வீட்டில் இருந்து மடிக்கணனி, கையடக்க தொலைபேசி, கடவுச்சீட்டு, வங்கி அட்டைகள், வங்கி புத்தகங்கள் என பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட நிலையில் ஒரு மணித்தியாலத்தில் சந்தேக நபரை அச்சுவேலி குற்றத்தடுப்பு பொலிஸாரால் களவாடப்பட்ட பொருட்களுடன் சந்தேக நபரும் கைதானார்.

விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை நீதி மன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-5-6-33)

# திருமறைக் கலாமன்றத்தில் நாடகப் பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான முழுநாள் பயிற்சிப் பட்டறை நாளை மறுதினம் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பி.ப 5 மணி வரை இல 286, பிரதான வீதி, யாழில் அமைந்துள்ள மன்றத்தின் கலைதூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறையில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள், நாளை வெள்ளிக் கிழமைக்கு முன்பாக தமது பெயர் விபரங்களை யாழ்.திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறும் மேலதிக விபரங்களுக்கு 021 222 2393, 077 669 2657 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அறியமுடியும்.(நி-5-6)


# இலவச யோகா கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டிற்காக இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகக்கலை அடிப்படை கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணிமுதல் காலை 8 மணிவரை நடைபெறவுள்ள இவ்வகுப்புகளில் ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்து கொள்ள முடியும். சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இவ் அடிப்படைக் கற்கை நெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழுங்கப்படவிருக்கின்றன.

பயில விரும்புவோர் அன்றைய தினம் நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்பில் இணைந்து கொள்ளுமாறும் மேலதிக தகவல்களுக்கு 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அறிய முடியும் என கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார். (நி-5-6)



புனித அந்தோனியாரின் பொற்பண்டம், பாதுவா நகரில் இருந்து யாழ்.மறைமாவட்ட ஆயரினால் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு கொண்டு வரப்பட்டு அங்கு வைக்கப்படும் புனித நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (படங்கள்: சிவசாந்தன்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3041

### நிவின்சன்




### அருள்




### சியானி




### தர்ஷா




### ஆகாஷ்




### ராகவி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெய... facebook ...தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மாத இராசிபலன்கள் 13.02.2024–13.03.2024



**மேஷ இராசி வாசகர்களே!**

**அச்சுவினி:** உங்கள் நட்சத்திர நாதனான கேது பகவான் இந்த மாதம் முழுவதும் ஆறாம் இடத்தில் சஞ்சரிப்பதால் உங்கள் ஆற்றல் அதிகரிக்கும். எதிர்ப்புகள் விலகும். உடல்நிலையில் இருந்த பாதிப்புகள் விலகும். வழக்குகள் உங்களுக்கு சாதகமாகும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். லாப ஸ்தானத்தில் சூரிய பகவான் சஞ்சரிப்பதால் அரசு வகையிலான சங்கடங்கள் முடிவிற்கு வரும். எதிர்பார்த்த அனுமதி கிடைக்கும். அரசு உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்த இடமாற்றம் பதவி உயர்வு ஏற்படும். இதுவரையில் தடைப்பட்டு வந்த முயற்சிகள் இனி வெற்றியாகும். தொழில் வியாபாரத்தில் இருந்த நெருக்கடிகள் நீங்கும். வருமானம் அதிகரிக்கும். விவசாயிகளின் விளைப் பொருளுக்கு எதிர்பார்த்த விலை கிடைக்கும். குரு பகவானின் பார்வைகளால் குடும்பத்தில் இருந்த சங்கடம் விலகும். குல தெய்வ அருள் உண்டாகும். உங்கள் மனதை வாட்டிவந்த பிரச்சினைகள் விலகும். தம்பதியரிடம் ஒற்றுமை அதிகரிக்கும். சிலருக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும். திருமண வயதினருக்கு வரன் தேடிவரும். தெய்வ அருள் உண்டாகும். அரசியல்வாதிகளின் செல்வாக்கு உயரும். சிலருக்கு புதிய பொறுப்புகள் உண்டாகும். உங்களில் சிலர் புதிய வீடு கட்டி அதில் குடியேறுவீர்கள். மாணவர்களுக்கு கல்வியில் அக்கறை உண்டாகும்.

சந்திராஷ்டமம்: மார்ச் - 2, 3.

அதிர்ஷ்ட நாள்: பெப்ரவரி 16,18,25, மார்ச் 7,9

பரிகாரம் விநாயகருக்கு அறுகம்புல் சூட்டி வழிபட நன்மை அதிகரிக்கும்.

**பரணி:** உங்கள் இராசிநாதனும் நட்சத்திரநாதனும் பத்தாம் இடத்தில் சஞ்சரிப்பதால் பொருளாதார ரீதியாக சில சிரமங்களை நீங்கள் சந்திக்க வேண்டியிருக்கும். எதிர்பாராத விரயங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டாகும். வரவு-செலவுகளில் முடிந்த வரையில் கவனமாக இருப்பது நல்லது. குருபகவான் ஜென்ம இராசியில் சஞ்சரித்தாலும் ஒன்பதாம் இடத்தை பார்ப்பதால் தெய்வ அருள் உண்டாகும். பெரியோர்களின் உதவியால் நினைத்ததை சாதித்துக் கொள்வீர்கள். லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனிபகவானால் தொழில், வியாபாரம் விருத்தியாகும். சிலர் புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஈடுபடுவர். கடந்த காலத்தில் இருந்த நெருக்கடி விலக ஆரம்பிக்கும். உங்களுக்கு எதிராக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர். புதிய இடம் வாங்கும் முயற்சி வெற்றியாகும். விவசாயிகளுக்கு எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணியாளர்களுக்கு லாபச் சூரியனால் சங்கடங்கள் விலகும். மேலதிகாரிகளால் பாராட்டப்படுவீர்கள். சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கும். தனியார் நிறுவனத்தில் பணிபுரிபவர்களுக்கு மதிப்பு அதிகரிக்கும். சனிபகவானின் பார்வை ஜென்ம இராசியிலும் எட்டாம் இடத்திலும் பதிவதால் சிலருக்கு வம்பு, வழக்குகள் தேடி வரும். உடல்நிலையில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. பெண்களின் நிலையில் உயர்வு உண்டாகும். திருமண வயதினருக்கு வரன் தேடி வரும். குடும்பம், பணியிடத்தில் மதிப்பு அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் அக்கறை அதிகரிக்கும். வெளிநாட்டு முயற்சியனைத்தும் லாபத்தில் முடியும்.




சந்திராஷ்டமம்: மார்ச் 3, 4.

அதிர்ஷ்ட நாள்: பெப்ரவரி 15,18,24, மார்ச் 6,9.

பரிகாரம்: காளியை வழிபட்டால் நன்மை கூடும்.

**கார்த்திகை 1 ம் பாதம்:**

உங்கள் நட்சத்திரநாதன் 11 ஆம் இடத்தில் சஞ்சரிப்பதால் இந்த மாதத்தை உங்களுக்கு அதிர்ஷ்டமான மாதம் என்றே சொல்ல வேண்டும். உங்கள் எதிர்பார்ப்புகள் எல்லாம் நிறைவேறும். இதுவரையில் தடைப்பட்ட முயற்சிகள் இனி ஒவ்வொன்றாக நிறைவேறத் தொடங்கும். அரசுவழியில் எதிர்பார்த்த அனுமதிகள் கிடைக்கும். புதிய தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி பெறும். வழக்கு விவகாரம் உங்களுக்கு சாதகமாக இருக்கும். அரசியல்வாதிகளின் செல்வாக்கு உயரும். சிலருக்கு புதிய பொறுப்பு உண்டாகும். மற்றவர்கள் முன்பாக உங்கள் ஆளுமைத்திறன் வெளிப்படும். லாபம் பலவழிகளில் வர ஆரம்பிக்கும். சொத்து சேர்க்கை உண்டாகும். பணியாளர்களுக்கு இதுவரை இருந்த நெருக்கடிகள் விலகும். உடல் நிலையில் ஏற்பட்ட சங்கடங்கள் விலகும். உங்களுக்கு எதிராக செயற்பட்டவர்கள் விலகிச் செல்வார்கள். புதிய இடம், சொத்து வாங்கும் முயற்சி நிறைவேறும். குடும்பத்தில் இருந்த சங்கடங்கள் விலகும். அலைச்சல் அதிகரித்தாலும் அதற்கேற்ற பலன்கள் கிடைக்கும். வேலை வாய்ப்பிற்காக காத்திருந்தவர்களுக்கு எதிர்பார்த்த தகவல் வரும். சிலர் புதிய தொழில் தொடங்குவீர்கள்.

வெளிநாட்டிற்கு செல்லும் முயற்சி வெற்றியாகும். பெண்களின் வாழ்க்கையில் இந்த மாதம் யோக மான மாதமாக இருக்கும். வெளிவட்டாரத்திலும் குடும்பத்திலும் செல்வாக்கு அதிகரிக்கும். பணிபுரியும் இடத்தில் பாராட்டப்படுவீர்கள். விவசாயிகளின் எண்ணம் நிறைவேறும். மாணவர்களுக்கு கல்வியில் இருந்த சங்கடம் விலகும். ஆசிரியர்களின் ஆதரவு உண்டாகும்.

சந்திராஷ்டமம்: மார்ச் - 4

அதிர்ஷ்ட நாள்: பெப்ரவரி-18, 19, மார்ச். 1,9,10

பரிகாரம்: சிவனைச் சரணடைந்தால் சிரமம் குறையும்.



**ரிஷப இராசி வாசகர்களே!**

**கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதம்:** உங்கள் நட்சத்திரநாதன் இந்த மாதம் முழுவதும் பத்தாம் இடத்தில் சஞ்சரிப்பதால் தொழில், உத்தியோகம் வியாபாரம் போன்றவற்றில் இருந்த தடைகள் விலகும். வருமானம் அதிகரிக்கும். செல்வாக்கு உயரும். லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் ராகுவால் எதிர்பார்த்த வருமானம் வந்துசேரும். குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். வெளிநாட்டு முயற்சிகள் ஆதாயத்தை ஏற்படுத்தும். உங்கள் செல்வாக்கு உயரும் என்றாலும், தொழிலில் முழுமையான அக்கறையை நீங்கள் செலுத்துவதால் லாபம் அதிகரிக்கும். புதனின் அருளால் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். கலைஞர்களின் திறமை வெளிப்படும். சிலர் புதிதாக சொத்து வாங்குவீர்கள். பாக்கிய சுக்கிரனால் வருமானம் அதிகரிக்கும். உங்கள் எதிர்பார்ப்பு பூர்த்தியாகும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். பெண்களின் தேவைகள் பூர்த்தியாகும். குழந்தைகளின் நலனில் கூடுதல் அக்கறை செலுத்துவீர்கள். சிலர் புதிய வீட்டில் பால் காய்ச்சுவீர்கள். விவசாயிகளின் எதிர்பார்ப்பு நிறைவேறும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை உண்டாகும்.

சந்திராஷ்டமம்: மார்ச் - 4, 5

அதிர்ஷ்ட நாள்: பெப்ரவரி. 15,19,24 மார்ச் 1,6,10.

பரிகாரம்: விநாயகப்பெருமானை வழிபட்டு வர வளம் சேரும்.

**ரோகிணி:**

சந்திர பகவானின் அம்சத்தில் பிறந்த உங்களுக்கு இந்த மாதம் உங்கள் விருப்பங்கள் நிறைவேறுகின்ற மாதமாக இருக்கும். ஒன்பதாம் இடத்தில் சஞ்சரிக்கின்ற சுக்கிர பகவான் உங்கள் தேவைகளை நிறைவேற்றுவார். புதிய வாகனம் வாங்கும் யோகம் சிலருக்கு உண்டாகும். பொன் பொருள் சேர்க்கை ஏற்படும். பத்தாமிடத்தில் சஞ்சரிக்கும் புத பகவான் தொழில் ரீதியாக நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளை வெற்றியாக்குவார். சிலருக்கு புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். சொத்து சேர்க்கை உண்டாகும். அரசு வழி முயற்சிகள் வெற்றியாகும். உங்கள் திறமை செல்வாக்குயாவும் இப்போது வெளிப்படும். உங்களுக்கு எதிராக செயற்பட்டவர்கள் பலவீனம் அடைவார்கள். அரசுவழி முயற்சிகளில் எதிர்பார்த்த அனுகூலம் உண்டாகும். ஏழாம் இடத்திற்கு சனியின் பார்வை உண்டாவதால் குடும்பத்தினரிடம் அனுசரித்துச்செல்வது இக் காலத்தில் நன்மையாக இருக்கும். பெண்கள் வாழ்க்கைத் துணையை அனுசரித்துச் செல்வதால் சங்கடங்கள் இல்லாமல் போகும். நட்பு வட்டத்தில் எச்சரிக்கையாக இருப்பது அவசியம். கூட்டுத் தொழிலில் கவனம் தேவை. வீண்செலவுகள் அதிகரிக்கும். இருந்தாலும் எதிர்பாராத வருமானம் வரும். உங்கள் தேவையனைத்தும் பூர்த்தியாகும். மாணவர்களின் உயர்கல்விக் கனவு நிறைவேறுகின்ற வகையில் படிப்பின் மீது அக்கறை அதிகரிக்கும். தேர்வை தைரியமாக எதிர்கொள்ளும் நிலை ஏற்படும். விவசாயிகளுக்கு சங்கடங்கள் விலகும்.

சந்திராஷ்டமம்: மார்ச் - 5, 6.

அதிர்ஷ்ட நாள்: பெப்ரவரி. 15, 20, 24, மார்ச். 2,6,11

பரிகாரம் சிவனை வழிபட சங்கடம் அனைத்தும் விலகும்.




**மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதம்:**

இந்த மாதம் முழுவதும் உங்கள் நட்சத்திரநாதன் பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதுடன் அவருடைய பார்வை மூன்றாம் இடத்திற்கு உண்டாவதால் உங்கள் செயலில் வேகம் இருக்கும். காரியங்களில் துணிச்சலுடன் ஈடுபட்டு வெற்றி அடைவீர்கள். பத்தாம் இடச் சூரியனால் அரசுவழி முயற்சிகள் ஆதாயம் தரும். உத்தியோகத்தில் இருந்த பிரச்சினைகள் முடிவிற்கு வரும். வேலை தேடி வந்தவர்களுக்கு எதிர்பார்த்த தகவல் வரும். அரசியல்வாதிகளின் செல்வாக்கு அதிகரிக்கும். புதிய பொறுப்பு உண்டாகும். லாப ராகுவால் எதிர்பார்த்த வருமானம் வர ஆரம்பிக்கும். வெளிநாட்டிற்கு செல்ல முயற்சித்தவர்களுக்கு வாய்ப்புகள் தேடி வரும். கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் உண்டாகும். புதபகவான் உங்கள் புத்திசாலித்தனத்தை வெளிப்படுத்துவார். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட வைப்பார். சொத்து சேர்க்கை உண்டாகும். வியாபாரத்தில் இருந்த தடைகள் விலகி வருமானம் வர ஆரம்பிக்கும். சுக ஸ்தானத்திற்கு சனிபகவானின் பார்வை பதிவதால் அலைச்சல் அதிகரிக்கும். தாயாரின் உடல் நிலையில் சில சங்கடங்கள் தோன்றி மறையும். வாழ்க்கைத் துணைக்கும் உங்களுக்கும் ஏதாகிலும் ஒரு வகையில் முட்டல் மோதல் என்ற நிலை உண்டாகும். புதிய தொழில் தொடங்கும் முயற்சி நிறைவேறும். வெளிவட்டாரத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். பெண்களின் கனவுகள் பூர்த்தியாகும். பொன், பொருள் சேர்க்கை உண்டாகும். பிள்ளைகளின் முன்னேற்றத்தில் கவனம் செல்லும். விவசாயிகளுக்கு விளைச்சலில் ஆர்வம் அதிகரிக்கும். மாணவர்கள் எண்ணம் கல்வியின் மீது செல்லும்.

சந்திராஷ்டமம்: மார்ச் - 6, 7.

அதிர்ஷ்ட நாள்: பெப்ரவரி. 15, 18, 24. மார்ச் 6, 9.

பரிகாரம்: கிருஷ்ணரை வழிபட வாழ்க்கை வளமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

## பாகிஸ்தான் பிரதமராக ஷெபால் ஷெரீஃப் தேர்வு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பிரதமராக நவாஸ் ஷெரீஃபின் சகோதரர் ஷெபாஸ் ஷெரீஃப் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானில் பாராளுமன்ற தேர்தல் கடந்த 8 ஆம் திகதி நடைபெற்றது.

இந்த தேர்தலில், எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை.

இதனால் புதிய அரசு அமைப்பதில் குழப்பம் நீடித்து வந்தநிலையில், நவாஸ் ஷெரீஃபின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி , பிலாவல் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சி ஆகியவை கூட்டணி அரசு அமைக்க முடிவு செய்தன.

பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி பிரதமர் வேட்பாளராக யாரை அறிவித்தாலும், அவருக்கு ஆதரவு தெரிவிப் போம் என்று பிலாவல் பூட்டோ அறிவித்த நிலையில், நவாஸ் ஷெரீஃப் தனது சகோதரரும் பாக். முன்னாள் பிரதமருமான ஷெபாஸ் ஷெரீஃபை பிரதமர் வேட்பாளராக அறிவித்துள்ளார்.

இதனால் பெரும் பான்மையான எம்.பிக்களின் ஆதரவு பெற்று ஷெபாஸ் ஷெரீஃப், பாகிஸ்தான் பிரதமராக மீண்டும் பதவியேற்கவுள்ளார். (நி-5-6)

# நேட்டோ நாடு

# ரஷ்யா தாக்கி

# அமெரிக்கா உதவ மு

## ட்ரம்பின் கருத்தால் ஐரோப்பிய நாடு

**(வோஷிங்டன்)**

**மீண்டும் நான் ஆட்சிக்கு வந்தால் தங்கள் நிதிப் பங்களி நேட்டோ நாடுகளை ரஷ்யா தாக்கினாலோ அல்லது ஆக்கிரப முன்வராது என முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கருத்தால் ஐரோப்பிய நாடுகள் அச்சத்தில் உள்ளன.**

கடந்த 2022 பெப்ரவரி மாதம், ரஷ்யா "சிறப்பு ராணுவ நடவடிக்கை" எனும் பெயரில் தனது அண்டை நாடான உக்ரைனை ஆக்கிரமித்தது.

இதனை எதிர்த்து அமெரிக்கா மற்றும் மேற்கத்தேய நாடுகளின் ராணுவ மற்றும் பொருளாதார உதவிகளுடன் உக்ரைன் தீவிரமாகப் போரிட்டுவருகிறது.போர் 2 ஆவது ஆண்டை நெருங்கும் நிலையில் உக்ரைனுக்கு உதவியளித்து வந்த அமெரிக்காவில் தற் போது நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், சில ளுக்கு முன் அமெரிக் உரையாற்றிய முன்னா திபதி டொனால்ட் ட்ரம் மீண்டும் ஆட்சிக்கு தங்கள் நிதி பங்க

## இறுதிச் சடங்கின் போது உயிரோடு எழுந்த பெண்

### ஒடிசா மாநிலத்தில் பரபரப்பு

(டில்லி)

ஒடிசா மாநிலத்தில் உயிரிழந்ததாக கருதி ஏற்பாடு செய்த இறுதிச் சடங்கில் உயிர்த்தெழுந்த பெண்ணால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

ஒடிசா மாநிலம் பெர்ஹாம்பூரைச் சேர்ந்த சிபாராம் பாலோ.இவரது மனைவி புஜ்ஜி அம்மாவுக்கு கடந்த முதலாம் திகதி வீட்டில் நடந்த சிறிய தீ விபத்தில் சிக்கி 50 சதவீத அளவுக்கு தீக்காயம் ஏற்பட்டது. இதையடுத்து, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

போதிய பணம் இல்லாததால் சிகிச்சையின் இடையிலேயே அவர் வீட்டுக்குத் திரும்பினார்.


இருந்தாலும் வீட்டில் இருந்தபடியே அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை காலை இவர் தூக்கத்திலிருந்து எழுந்திருக்கவில்லை.

இதனால் கணவர் மற்றும் உறவினர்கள் புஜ்ஜி அம்மா இறந்துவிட்டதாகக் கருதி இறுதிச்சடங்குக்கு ஏற்பாடு செய்து மாலை இறுதிச் சடங்குக்காக அமரர் ஊர்தியில் புஜ்ஜி அம்மாவின் உடல் சுடுகாட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டது.

கடைசி நேரத்தில் சிதைக்கு தீவைக்க முயன்ற நேரத்தில் புஜ்ஜி அம்மா கண் திறந்து பார்த்தார். இதையடுத்து அவர் உயிருடன் இருப்பதைப் பார்த்த உறவினர்கள் 'பேய்' என்று அலறியடித்துக் கொண்டு ஓடினார்கள்.

சிகிச்சைக்குப் பின்னர் புஜ்ஜி அம்மா தற்போது வீடு திரும்பி உள்ளார். இந்த சம்பவம் பெர்ஹாம்பூரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.(நி-5-6)

## 1700 ஆண்டுகள் பழமையான முட்டை இங்கிலாந்தில் கண்டுபிடிப்பு



(லண்டன்)

இங்கிலாந்தின் வடக்கு பிராந்தியத்தில் அமைந்துள்ள பெர்ரிஃபீல்ட்ஸ் எனும் இடத்தில் 1700 ஆண்டுகள் பழமையான முட்டை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக ஒக்ஸ்போர்ட் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த முட்டையை ஆய்வு செய்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள், முட்டையின் உள்ளே மஞ்சள் கருவும் வெள்ளை கருவும் இன்னும் இயற்கையாக பாதுகாக்கப்படும் விடயமானது ஆச்சரியமளிப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் இங்கிலாந்தின் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் எட்வர்ட் பிடுல்ஃப் கருத்து தெரிவிக்கையில்,

"மனித தலையீடு இல்லாமல் 1,700 ஆண்டுகளுக்குப் பிறகு இயற்கையாகப் பாதுகாக்கப்பட்ட மஞ்சள் கரு மற்றும் வெள்ளைக் கருவைக் கொண்ட உலகின் ஒரே முட்டை இது வாகும்.

இந்த முட்டை எந்த பறவை இனத்தினுடையது என்பது பற்றி மேலும் அறிய ஒரு தனித்துவமான வாய்ப்பு கிடைத்துள்ளது.

இந்நிலையில், கென்ட் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சியை மேற்கொண்ட போது முட்டைக்குள் உள்ள திரவ உள்ளடக்கத்தை உறுதிப்படுத்த முடிந்தது" என தெரிவித்துள்ளார். (நி-5-6)

அ



(வே
பனி
அமெரி
பகுதியி
கான
ள்ளன

இதே
இற்கு
ங்கள்
தாக ச
தெரிவி
அத

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ...களை ...கினால் ...முன்வராது ...நாடுகள் அச்சத்தில்



...ங்களிப்பை முறையாக வழங்காத ...க்கிரமித்தாலோ அமெரிக்கா உதவ ...ரம்ப் தெரிவித்துள்ளார். ட்ரம்பின்

...ில், சில தினங்க ... அமெரிக்காவில் ... முன்னாள் ஜனா ...ல்ட் ட்ரம்ப், தான் ...ட்சிக்கு வந்தால் ...ி பங்களிப்பை முறையாக வழங்காத நேட்டோ நாடுகளை ரஷ்யா தாக்கி னால் அமெரிக்கா உதவ முன் வராது என தெரிவித்துள்ளார்.

ட்ரம்பின் இந்த கருத்து பல ஐரோப்பிய நாடுகளுக்கு ரஷ்யா குறித்து அச்சம் அதிகரித்துள்ளது.

ட்ரம்பின் தற்போதைய கருத்து, அமெரிக்க துருப்புகளுக்கும், அமெரிக்காவின் நேச நாடுகளுக்கும் ஆபத்தை விளைவிக்கலாம் என நேட்டோ தலைமை செயலாளர் ஜென்ஸ் ஸ்டா ல்டன்பர்க் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## பிலிப்பைன்ஸ் நிலச்சரிவில் அதிகரிக்கும் உயிரிழப்புகள்



(மணிலா)

பிலிப்பைன்ஸில் கடந்த வாரம் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 68 ஆக உயர்ந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

மிண்டானாவ் மாகாணம், மசாரா கிராமத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிகளில் இருந்து திங்கட்கிழமை மேலும் 12 உடல்கள் மீட்கப்பட்டன. அதையடுத்து, நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 68 ஆக உயர்ந்துள்ளதாகவும் இது தவிர, நிலச்சரிவு ஏற்பட்டபோது அங்கிருந்த மேலும் 51 பேரைக் காணவில்லை. அவர்களைத் தேடும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பிலிப்பைன்ஸின் தெற்குப் பகுதியில் தங்கச் சுரங்கங்கள் அமைந்துள்ள மசாரா கிராமத்தில் இந்த நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் சிக்கி உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் சாலையில் நிறுத்தப்பட்டிருந்த 2 பேருந்துகளில் அமர்ந்திருந்த சுரங்கத் தொழிலாளர்கள் என்று கூறப்படுகிறது. சம்பவப் பகுதிகளில் இராணுவம், பொலிஸார் மற்றும் தன்னார்வலர்கள் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு நிலச்சரிவில் காயமடைந்த 31 கிராமத்தினரை மீட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## அமெரிக்காவில் பனிப்புயல்

- மில்லியன் கணக்கானோர் பாதிப்பு
- 1220 விமானங்கள் ரத்து



(வோஷிங்டன்)

பனிப்புயல் காரணமாக அமெரிக்காவின் வடகிழக்கு பகுதியில் மில்லியன் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக 1,220 இற்கும் மேற்பட்ட விமானங்கள் இரத்து செய்யப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், பனிப்புயல் தாக்கத்தினால் நியூயோர்க் நகரிலுள்ள பாடசாலைகள் மூடப்பட்டதுடன், வாகனம் செலுத்துவதனை தவிர்க்குமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் தேவையற்ற பயணங்களை தவிர்க்குமாறும் அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரம் பொது போக்குவரத்து சேவைகளை பயன்படுத்துமாறும் அவசர அறிவிப்பு அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதன்படி, நான்கில் இருந்து எட்டு அங்குலம் அதாவது 10 முதல் 20 சென்ரிமீற்றர் வரை பனிப்பொழிவு காணப்படும் எனவும் மணித்தியாலத்திற்கு 40 மைல் வேகத்தில் காற்று வீசக்கூடுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், சுமார் 32 மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு பனிப்புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கிழக்கு கடற்கரையின் சில பகுதிகளில் வெள்ள அனர்த்தம் ஏற்படலாமென எதிர்பார்க்கப்படுவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (நி-5-6)

## தொடர் ஏவுகணைச் சோதனை நடத்தும் வடகொரியா


(பியாங்யாங்)

வடகொரியா தனது வடகிழக்கு கடற்பகுதியில் கப்பலில் இருந்து பல ஏவுகணைகளை வீசியதாக தென் கொரிய ராணுவம் தெரிவித்துள்ளது.

மேலும் கிழக்கு கடற்கரை நகரமானபொன்சானின் வடகிழக்கு கடல்பகுதியில் கண்டறியப்பட்ட ஏவுகணைகளை தென்கொரியா, அமெரிக்க ராணுவங்கள் ஆய்வு செய்து வருவதாக தென்கொரியா கூட்டுப்படை தலைவர்கள் தெரிவித்தனர்.

வட கொரியா, தென்கொரியா, அமெரிக்காவின் எச்சரிக்கைகளை கண்டு கொள்ளாமல் அடிக்கடி ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது.

சமீபத்தில் தென் கொரியாவுக்கு எதிராக போருக்கு தயாராக இருக்க வேண்டும் என்று வடகொரியா ஜனாதிபதி தெரிவித்தார். இதனால் கொரிய தீபகற்பத்தில் பதற்றம் நிலவி வருகிறது. (நி-5-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் நுண்நிதி கடன்களால் 28 இலட்சம் பேர் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நுண்நிதி கடன் பிரச்சினையால் கிராம மக்களில் 28 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளமை பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தினைத் தணித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுக் கூட்டத்தில் தெரியவந்துள்ளது.

அத்துடன் 38 சதவீதம் முதல் 48 சதவீதம் வரையிலான அதிக வட்டி வீதத்துக்கே நுண்நிதி கடன்கள் வழங்கப்பட்டுள்ளமையும் இதன் போது புலப்பட்டுள்ளது.

இதேவேளை பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டுப் பணிப் பெண்களாகச் செல்வதற்கு நுண்நிதி கடன் பிரச்சினையும் ஒரு காரணமாகும். (நி-5-6)


# தொடரும் பணிப்புறக்கணிப்பு

(கொழும்பு)

மருத்துவர்கள் தவிர்ந்த 72 சுகாதார தொழிற்சங்கத்தினர் முன்னெடுத்துள்ள பணிப் புறக்கணிப்பு நேற்றும் தொடர்ந்தது.

தமக்கான உரிய தீர்வு முன்வைக்கப்படும் வரையில் தொடர்ச்சியான பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக சுகாதார தொழிற்சங்கங்கள் கூட்டமைப்பு அறிவித்துள்ளது. (நி-5-6)

# நிகழ்நிலை காப்புச் சட்டம் குறித்து அவதானம் செலுத்துமாறு வேண்டுகோள்



(வோஷிங்டன்)

கருத்துச் சுதந்திரத்தின் மீதான நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தின் தாக்கம் இலங்கையின் டிஜிட்டல் பொருளாதாரத்தில் முதலீடு செய்வதற்கு தடைகளை ஏற்படுத்தும் என சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க நிறுவனத்தின் தலைவர் சமந்தாபவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்திய போதே சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க நிறுவனத்தின் தலைவர் சமந்தாபவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது இலங்கையின் பொருளாதார சீர்திருத்தங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

கடினமான பொருளாதார சவால்களை எதிர்கொள்வதில் ஜனாதிபதி விக்கிரமசிங்கவுடன் இணைந்து பணியாற்றுவதற்கான சர்வதேச அபிவிருத்திக் கான அமெரிக்க நிறுவனத்தின் அர்ப்பணிப்பை இதன்போது சமந்தாபவர் வெளிப்படுத்தினார்.

இதேவேளை, ஜனநாயக ஆட்சியின் முக்கியத்துவம் மற்றும் ஆலோசனை சட்டமியற்றும் செயல்முறை குறித்தும் இதன் போது விவாதித்தனர். (நி-5-6)

## பீதுருதாலகால மலைத்தொடர்

# சுற்றுலாப் பயணிகளுக்காக மீண்டும் திறக்கப்பட வேண்டும்

(ஹற்றன்)

இலங்கையின் மிக உயரமான மலைத் தொடரான பீதுருதாலகால மலைத் தொடரை சுற்றுலாப் பயணிகளுக்காக மீண்டும் திறக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என மத்திய மாகாண ஆளுநர் லலித் யு.கமகே தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற நுவரெலியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வைத்து அவர் இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள குறித்த மலைத் தொடர் நாட்டில் மிக உயரமான மற்றும் பூச்சிய வெப்ப நிலையை கொண்ட பகுதியாகும்.

இந்த நிலையில் அது சுற்றுலாப் பயணிகளுக்காக மீண்டும் திறக்கப்பட வேண்டும்.

பீதுருதாலகால மலைப் பிரதேசமானது கல்வி மற்றும் சுற்றுலாத்துறையில் உயர் மதிப்பைக் கொண்டுள்ளதுடன் அதனை தொடர்ந்தும் மக்களுக்கு தடைசெய்யப்பட்ட பிரதேசமாக பராமரிப்பது பொருத்தமற்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# இன்று ஒரு தகவல் 37



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## மனமாற்றம்

ஒரு திருடன்...

அரசனின் அரண்மனையிலே திருடுவதற்காக சென்றான். நடு இரவு நேரம் இவன் மெதுவாக உள்ளே நுழைகின்றான். அந்தப்புரத்தில் யாரோ பேசிக்கொண்டு இருக்கும் சத்தம் கேட்டது. அது யார் என்று கவனிக்கிறான்.

ராஜா தான் ராணியிடம் பேசிக்கொண்டு இருக்கிறார். அவர் என்ன சொல்கிறார் என்று மெதுவாக காது கொடுத்து கேட்கின்றான். நம்ம பொண்ணுக்கு திருமணம் செய்து வைப்போமா என்று ராணி கேக்கிறார். அதுக்கு ராஜா அவசியம் செய்து வைக்க வேண்டியது தான். மாப்பிள்ளை யார் என்று தான் முடிவு செய்து விட்டேன் என்று சொன்னார். யார் மாப்பிள்ளை என்று கேட்டார் ராணி?

நம்ம ஊர் ஆற்றங்கரையில் சாதுக்கள் நிறைய பேர் இருக்கிறார்கள் அல்லவா? அவர்களில் ஒருவருக்குதான். நம் மகளை கல்யாணம் செய்து கொடுக்க போகிறேன் என்றார் ராஜா. அரசன் சொல்லிக்கொண்டு இருந்த விடயம் அங்கே ஒழிந்த இருந்த திருடனின் காதிலே விழுந்தது.

அவ்வளவு தான். அவன் அங்கேயே முடிவு செய்து விட்டான். ஆகா! அருமையான ஐடியா. அதிஷ்டம் தானா வருகிறது. அதை விடலாமா என்று யோசித்ததான்.

நாளைக்கே நாம ஒரு சாது வேடம் போட்டுக்கொண்டு ஆற்றங்கரையில் உட்கார்ந்து கொள்ள வேண்டியது தான் என்று முடிவு செய்தான்.

ஒரு வேளை நமக்கே யோகம் அடித்து இளவரசியே மனைவியாக வந்தாலும் வரலாம் என்கிறது அவன் நினைப்பு. அவ்வளவு தான் திருடன் மெதுவாக அரண்மனையை விட்டு வெளியே வந்தான். மறுநாள் காலையிலே ஒரு காலி வேட்டியை எடுத்து கட்டினான். ஆற்றங்கரைக்கு போனான். சன்னியாசி கோலத்திலே சாதுக்களில் ஒருத்தனாக போய் அமைர்ந்து கொண்டான்.

கொஞ்ச நேரம் ஆகியது. அரண்மனையில் இருந்து சில அதிகாரிகள் ஆற்றங்கரைக்கு வந்தார்கள். ஒவ்வொரு சன்னியாசிகளிடமும் அரசனின் மகளை திருமணம் செய்து கொள்ளும் படி கேட்டார்கள். இதற்கு யாரும் சம்மதிக்கவில்லை.

இதை அவன் பார்த்துக்கொண்டு இருந்தான். அவர்கள் இன்னும் நம்மிடம் வரவில்லையே என்ற ஏக்கம் அவனுக்கு.

கடைசியாக அந்த அதிகாரிகள் இவனிடம் வந்தார்கள். இளவரசியை திருமணம் செய்து கொள்ளுமாறு மிகவும் பயபக்தியோட கேட்டுக்கொண்டார்கள். இவன் பதில் எதுவும் பேசாமல் இருந்தான்...

அதிகாரிகள் அரண்மனைக்கு திரும்பி பேனார்கள். ராஜாவை பார்த்தார்கள். அவர் என்ன நடந்தது என்று கேட்டார்.

ஒரு வாலிப சன்னியாசி அங்கு உட்கார்ந்து இருந்தார். ஒரு வேளை அவர் இதற்கு சம்மதிப்பார் என்று தோன்றுகிறது. மற்றவர்கள் எல்லோரும் மறுத்து விட்டார்கள் என்று சொன்னார்கள்.

அதற்குபின் ராஜாவே அந்த ஆற்றங்கரைக்கு சென்று அந்த கபட சன்னியாசியிடம் தயவு செய்து தாங்கள் எனது மகளை ஏற்று அங்கீகரிக்கணும். திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று மனப்பூர்லவமாகவும் பணிவாகவும் அந்த சன்னியாசியிடம் வேண்டிக்கொண்டார். பிரார்த்தனையும் செய்தார்.

சன்னியாசி வேடத்திலே இருந்த திருடன் ஒரு கண்ணை மட்டும் திறந்து பார்த்ததான் அவ்வளவு பெரிய ராஜாவே அவனுக்கு முன்னாடி கை கட்டி அடக்கமாக நிற்பதை கண்டு கொஞ்சம் யோசிக்க ஆரம்பித்தான். நாம் உண்மையாகவே சன்னியாசி இல்லை. சாது மாதிரி ஆடை போட்டு இருக்கிறோம் அவ்வளவுதான்.

இதற்கே ஒரு ராஜா என்னை தேடி வந்து பணிவாக நின்று பேசுகிறார். அப்படி என்றால் நாம் உண்மையாவே சாதுவாகி விட்டால் இதை விட பெரிதாக ஏதேதோ நமக்காகக் காத்துக்கொண்டிருக்கும் போல இருக்கே. திருடனுக்கு சிந்தனை தெளிவாகிவிட்டது. அவன் மனப்போக்கு மாறிவிட்டது. போலி வேடத்தை கலைச்சான். கடுமையான முயற்சி செய்தான். நிஜமாகவே சாது ஆகிவிட்டான். பிற்காலத்தில் அவனே ஒரு பெரிய மகான் ஆகிவிட்டான்.

போலி வேடம் கூட சில சமயம் எதிர்பாராத நன்மையைக் கொடுக்கிறது என்பதை விளக்குவதற்காக ஸ்ரீராமகிருஷ்ணர் இந்தக் கதையைச் சொன்னார்.


இதுக்காக நீங்களும் உடனே ஒரு காவி வேஷ்டியைக் கட்டிக்கொண்டு ஆற்றங்கரையிலே போய் கொஞ்ச நேரம் உட்காரலாமா என்று யோசிக்க வேண்டாம். அதோட பலன் எப்படி இருக்கும் என்பதை நான் முன்கூட்டியே சொல்லுகிறேன். என்ன நடக்கும் தெரியுமா? ராஜாவும் உங்களைத் தேடி வரப்போவதில்லை. அதன் பின்பு நீங்கள் திரும்பி வந்து உங்கள் வீட்டிலேயும் அடி வைக்க முடியாது.

இரண்டும் கெட்டுப் போய்விடும். அரசனை நம்பி புருசனை கைவிட்ட கதை என்று சொல்லுவார்களே அது மாதிரி. இளவரசியை நம்பி மனைவியைக் கைவிட்ட கதையாகிவிடும் ஜாக்கிரதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்து விதி மீறல்களால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம்!

## கடைப்பிடிக்காதவர்கள் மீது பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும்



**(குருமன்காடு)**

**வவுனியா புகையிரத நிலைய வீதியில் காணப்படும் புகையிரத பாதுகாப்பு கடவையில் மக்கள் வீதி போக்குவரத்து நடைமுறைகளை பின்பற்றாது பயணம் செய்வதனால் விபத்துக்கள் ஏற்படும் அபாயங்கள் ஏற்பட்டுள்ளது.**

புகையிரத பாதுகாப்பு கடவையின் கதவுகள் மூடப்பட்டிருக்கும் சமயத்தில் மக்கள் வீதி போக்குவரத்து நடைமுறைகளை பின்பற்றாது பாதையின் இரு பக்கங்களிலும் சீரற்ற முறையில் வாகனங்களை தரித்து வைத்தல், கடவை மூடப்பட்டிருக்கும் சமயத்தில் வாகனத்தினை செலுத்துதல் மற்றும் கடவை திறந்தவுடன் எதிர்த்திசையில் வருகின்ற வாகனத்திற்கு வழி விடாது செல்லுதல் போன்ற செயற்பாடுகளில் மக்கள் ஈடுபட்டு வருவதால் வீதி விபத்துக்கள் ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது.


குறித்த பகுதிகளில் பொலிஸார் கடமையில் இருந்து வீதி போக்குவரத்து விதிமுறைகளை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் அண்மையில் கடவையை கடந்து சென்ற ஒருவர் கிளிநொச்சி புகையிரதத்துடன் மோதி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-250)

# மணல் அகழ்வை தடுக்க

## பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும்

### உமையாள்புர மக்கள் கோரிக்கை



(அக்கராயன்)

கிளிநொச்சி உமையாள்புரத்தில் தொடரும் மணல் அகழ்வினைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் இறுக்கமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என இப்பகுதி மக்களால் தெரிவித்துள்ளனர்.

கடந்த பத்தாண்டுகளாக உமையாள்புரத்தில் மணல் அகழ்வு தொடர்கின்றது. இது தொடர்பாக கண்டாவளை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் பல தடவைகள் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்ட போதிலும் மணல் அகழ்வினைக் கட்டுப்படுத்துவதற்கான எந்தவிதமான ஆக்க பூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட வில்லை.

நாள்தோறும் உழவு இயந்திரங்கள் மூலம் கொண்டு வரப்படும் மணல் டிப்பர்களில் ஏற்றி பல இடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன.

இந்நிலையில் உமையாள் புரத்தில் நடைபெறுகின்ற மணல் அகழ்வினைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் இறுக்கமான நடவடி க்கைகளை எடுக்க வேண்டும் என அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5-6-350)

# புதையல் அகழ்வில் கைதான அறுவர் மறியலில்

(நெளுக்குளம்) .

புதுக்குடியிருப்பில் புதையல் அகழ்வில் ஈடுபட்டு கைதான ஆறு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லை மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இரணைப்பாலை பிரதேசத்தில் அகழ்வில் ஈடுபட்டிருந்த வேளையே நேற்று முன்தினம் குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந் நிலையில் கைதான சந்தேக நபர்கள் ஆறு பேரையும் மீட்கப்பட்ட சான்றுப் பொருட் களையும் அன்றைய தினமே முல்லை மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோதே குறித்த ஆறுபேரையும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார். (நி-5-6-299)

# புங்குடுதீவு வரசித்தி விநாயகர் ஆலய கொடியேற்றம் இன்று


(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மத்தி பெருங்காடு மூத்த நயினார் புலம் ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் உற்சவங்கள் இடம்பெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழா, 24 ஆம் திகதி சனிக் கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (நி-5-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 200 | 250 | 250 | 325 |
| உருளைக்கிழங்கு | 160 | 150 | 140 | 150 | 140 |
| பச்சைமிளகாய் | 1000 | 1000 | 900 | 1000 | 850 |
| தக்காளி | 900 | 750 | 700 | 1000 | 675 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 130 | 150 | 125 |
| கோவா | 600 | 450 | 500 | 600 | 600 |
| கரட் | 800 | 750 | 600 | 1000 | 900 |
| பூசணி | 280 | 280 | 250 | 350 | 230 |
| புடோல் | 200 | 200 | 150 | 300 | 120 |
| வாழைக்காய் | 250 | 250 | 180 | 300 | 210 |
| சின்ன வெங்காயம் | 300 | 340 | 350 | 350 | 250-350 |
| பெரிய வெங்காயம் | 320 | 380 | 380 | 400 | 350-480 |
| பாகற்காய் | 400 | 400 | 500 | 400 | 540 |
| வெண்டக்காய் | 500 | 400 | 400 | 500 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 200 | 120 |
| பயற்றங்காய் | 400 | 400 | 300 | 500 | 455 |
| லீக்ஸ் | 450 | 450 | 500 | 600 | 450 |
| பீற்றூட் | 450 | 350 | 400 | 400 | 400 |
| கறிமிளகாய் | 800 | 900 | 700 | 1200 | 700 |
| முருங்கைக்காய் | 1800 | 1500 | 1200 | 1200 | 1000 |
| போஞ்சி | 400 | 250 | 500 | 600 | 450 |
| கத்தரிதம்புள்ள | 250 | 150 | -- | 200 | — |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 | 100 | 50-80 |
| தேசிக்காய் | 150 | 250 | 200 | 200 | 145 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 40-120 | 70-110 | 50-110 |
| இராசவள்ளி | 320 | 400 | 320 | 600 | 450 |
| வெங்காயப்பூ | 250 | 180 | 250 | 400 | 210 |
| முள்ளங்கி | 100 | 120 | 200 | 200 | 180 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 150 | 60 | 120 |
| வல்லாரை | 60 | 50 | 80 | 80 | 70 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 200 | 100 |



தவக்காலத்தின் ஆரம்ப நாளான திருநீற்றுப்புதன் நேற்று உலகமெங்கும் உள்ள கிறிஸ்தவர்களால் அனுஷ்டிக்கப்பட்டது.

(படம்- [illegible])


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 406





"ஐயா! தங்களையும், இந்த வைஷ்ணவரையும் பற்றி நீங்கள் எது வேணுமானாலும் சொல்லிக் கொள்ளுங்கள். என்னை மட்டும் சாதாரண மனிதன் என்று சொல்ல வேண்டாம்!" என்றான் வல்லவரையன்.

"மறந்து விட்டேன் மன்னிக்க வேண்டும். தாங்கள் பூர்வீகமான வல்லத்தரசர்கள் குலத்தில் பிறந்த அரசிளங்குமரர் அல்லவா?"

"ஆம், ஐயா, ஆம்! என் மூதாதை ஒருவரைப் பற்றி ஒரு புலவர் பாடியிருப்பதைக் கேட்டால் இந்த வீர வைஷ்ணவர் பொறாமையினால் புழுங்கிச் செத்துப் போனாலும் போய்விடுவார்."

"போனாலும் போகட்டும்! திருமலை நல்ல தமிழ் அபிமானி. பல்லவ குலத்து நந்திவர்மனைப் போல் தமிழ்ப் பாடலுக்காக உயிரைக் கொடுக்கவும் தயங்க மாட்டார். ஆகையால் பாடலைச் சொல்லுங்கள் கேட்கலாம்."

கொஞ்சம் தயக்கத்துடன் வல்லவரையன் பின்வரும் பாடலைக் கூறினான்:

"என் கவிகை என் சிவிகை
என் கவசம் என்துவசம்
என்கரி மீ(து) என்பரி மீது
என்பரே
மன்கவன மாவேந்தன்
வாணன் வரிசைப் பரிசு
பெற்ற பாவேந்தரை, வேந்தர்
பார்த்து!"

இதைக் கேட்ட பொன்னியின் செல்வர், "திருமலை, நீ தமிழ்ப் புலவனாயிற்றே! இந்தப் பாடலின் பொருள் என்ன, சொல்!" என்றார்.

"ஐயா! என்னைப் பரிசோதிக்கிறீர்கள் போலும். ஆகட்டும், இதோ சொல்லுகிறேன்: மாவேந்தர் வாணரின் அரண்மனை வாசலில் சிற்றரசர்கள் பலர் இராஜ தரிசனத்துக்காகக் காத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு இலேசில் தரிசனம் கிட்டவில்லை. ஏனெனில், பாவேந்தர்களாகிய கவிராயர்கள் முன்னமே அரண்மனைக்குள் சென்றிருந்தார்கள். அவர்களுடைய பாடலைக் கேட்டுவிட்டு வாணப் பேரரசர் மனமகிழ்ந்தார். அவர்களுக்குப் பரிசில்கள் கொடுத்து அனுப்பினார். பூச்சக்கரக் குடைகள், தந்தப் பல்லக்குகள், முத்துக் கவசங்கள், ரத்தினத் துவஜங்கள், யானைகள், குதிரைகள் முதலிய பலவகைப் பரிசுகள் கொடுத்து அனுப்பினார். ஆசார வாசலில் காத்திருந்த சிற்றரசர்கள் அந்தப் பரிசில்களைப் பார்த்து வயிறெரிந்து, 'அடடா! இது என் குடை அல்லவா? என் பல்லக்கு அல்லவா? என் யானை அல்லவா? என் குதிரை அல்லவா? இந்தப் பாழும் புலவர்கள் கொண்டு போகிறார்களே!' என்று புலம்பினார்கள். அந்தச் சிற்றரசர்கள் மாவேந்தர் வாணருக்கு காணிக்கைகளாகக் கொண்டுவந்து கொடுத்திருந்த பொருள்களை வாண மன்னர் புலவர்களுக்கு வெகுமதியாகக் கொடுத்து அனுப்பிக் கொண்டிருந்தார். இளவரசே! பாடலுக்குப் பொருள் சரிதானே?"

"நீ சொல்லுவதில் தவறு இருக்குமா! அடாடா, என்ன அற்புதமான பாடல்! எவ்வளவு நயமான கற்பனை! இதைப் பாடிய மகாகவி யாரோ தெரியவில்லை! வாணர் குல திலகமே! வந்தியத்தேவரே! உமது மூதாதைகளின் ராஜ்யம் பெரிதோ சிறிதோ, அதைப்பற்றிக் கவலையில்லை. இந்த மாதிரி ஒரு பாடலைப் பெற்றார்களே, அதைக் காட்டிலும் அவர்களுக்குச் சிறப்பு என்ன வேண்டும். அவர்களுடைய குலத்திலே பிறந்த நீர் இந்த அரண்மனையில் படுக்கத் தகுந்தவர்தான்! மகாசேனரின் கட்டில் மாத்திரம் என்ன? சாக்ஷாத் துஷ்டகமனு சக்கரவர்த்தி படுத்திருந்த கட்டில் இப்போது கிடைக்குமானால் அதிலேயே நீர் படுக்கலாம். நீர் அதற்குத் தகுதி வாய்ந்தவர்தான்!"

"ஆமாம் ஐயா! ஆமாம்! நான் எதற்கும் தகுதி வாய்ந்தவன் தான். ஆனால் இந்த நாளில் தகுதிக்கு யார் மதிப்புக் கொடுக்கிறார்கள்? அந்த பிக்குக்கள் இந்த இலங்கா ராஜ்யத்தின் கிரீடத்தை எனக்குக் கொடுத்தார்களா? வேண்டாம் என்று மறுதளிக்கக் கூடிய தங்களைப் பார்த்துத் தானே கொடுத்தார்கள்? அப்போது எனக்கு என்ன ஆத்திரம் வந்தது தெரியுமா? கிரீடத்தைத் தூக்கி என் தலையில் நானே சூட்டிக் கொண்டு விடலாமா என்று பார்த்தேன்! (தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## உயிர்கள் மீது அன்பு செலுத்துவோம்



ஒரு நாட்டுல ஒரு ராஜா இருந்தாரு. அவருக்கு ஒரு அழகான இளவரசி இருந்தா.

ரொம்ப நல்ல பெண்ணான அவ ரொம்ப இரக்க குணம் கொண்டவலா இருந்தா. எல்லா மிருகங்களையும் பறவைகளையும் நல்ல படியா பாத்துக்கிட்டா.

ஒருநாள் தோட்டத்துல ஒரு குட்டி குருவி அடிபட்டு கிடக்கிறத பார்த்தா. அதை பார்த்த இளவரசி அரோராவுக்கு ரொம்ப கவலையா போச்சு.

அதனால தன்னோட அரண்மனைக்கு அத எடுத்துட்டு போயி வைத்தியம் பார்க்க ஆரம்பிச்சா.

தன்னோட பாட்டி கிட்ட கொண்டுபோய் அந்த குருவிய கொடுத்து வைத்தியம் செய்ய சொன்னா. அவங்களும் நிறைய மூலிகைகளை போட்டு மருந்து தயார் செஞ்சு அந்த குருவியை காப்பாத்துனாங்க.

ஆனா அந்த குருவிக்கு ரொம்ப அடிபட்டதால அது பறக்கவே இல்ல.

ரொம்ப நாள்கழிச்சு அந்த குருவிக்கு உடம்பு சரியாச்சு. உடனே அரண்மனை மாடிக்கு வந்த இளவரசி அந்த குருவிய பறக்க சொன்னார்.

ரொம்பநாள் பறக்காம இருந்த அந்த குருவி கொஞ்சம் கொஞ்சமா கஷ்டப்பட்டுபறந்துபோச்சு.

அந்த குருவி பறந்து போறதை பார்த்துகிட்டு இருந்த இளவரசிக்கு முன்னாடி படக்குனு ஒரு மந்திர தேவதை வந்துச்சு. என்னுடைய படைப்பான அந்த குருவியை காப்பாத்துனதுக்கு உனக்கு என்ன வரம் வேணும்னு கேட்டுச்சு அந்த தேவதை.

அதுக்கு இளவரசி அரோரா சொன்னார். நான் இதே மாதிரி நிறைய மிருகங்களையும் பறவைகளையும் காப்பாத்தணும். அதனால் யாருக்கெல்லாம் என்னோட உதவி தேவையோ அவங்க இடம் எனக்கு தெரியணும்னு கேட்டா.

அதுக்கு அந்த மந்திர தேவதை சொல்லுச்சு. உனக்கு நான் வரம் கொடுக்க நினைச்சா நீ மத்தவங்களுக்கு வரம் கேக்குற. உன்னோட நல்ல குணம் எனக்கு புடிச்சிருக்கு. உனக்கு நீ கேட்ட வரத்தை கொடுக்கிறேன். அதே நேரத்துல நீ தொட்டதும் அந்த பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் உடனே வைத்தியம் இல்லாமலேயே உடம்பு சரியாகிடும்னு இன்னொரு வரத்தையும் சேர்த்தே கொடுத்துச்சு அந்த தேவதை.

புது சக்தி கிடைச்ச இளவரசி அரோரா அந்த நாட்டுல இருக்குற அடிபட்ட, உடம்புக்கு சரியில்லாத மிருகங்களையும் பறவைகளையும் அவளுக்கு கிடைச்ச புது சக்தியை வச்சு கண்டுபிடிச்சி அதுங்கள தேடி போனா.

அந்த மிருகங்களை தன்னோட சக்தியால குணப்படுத்தி அதுல சந்தோசப்பட்டா அரோரா.

அவளோட இந்த நடவடிக்கைகளை பார்த்த அரசர், மத்தவங்களுக்கு உதவி செய்றவங்க தான் இந்த நாட்டை ஆளும்முதல்தகுதி படைச்சவங்களா இருக்காங்க. அப்படி பாக்கும் போது மற்ற உயிரினங்கள்மேல அன்பு செலுத்துற உனக்கு இந்த அரசையே பரிசா தாறேன். நீ தான் இனிமே இந்த நாட்டோட ராணினு சொன்னாரு.

தன்னுடைய நல்ல குணத்தினால அரசியான அரோரா தொடர்ந்து நல்ல விடயங்களையே செய்ய ஆரம்பிச்சு உலகபுகழ் அடைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ பலமுள்ளவனாக இருக்க விரும்பினால், உன்னுடைய பலவீனங்களைத் தெரிந்துகொள்.

~ ஓர் அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உலகின் மிகச் சிறந்த தலைவர் பிரதமர் மோடி

ஒரு தலைவன் எப்படியிருக்க வேண்டும் என்று யாரேனும் எம்மிடம் கேட்டால், அதோ! இந்தியப் பிரதமர் மோடியைப் போல இருக்க வேண்டும் என்று கூறுவோம்.

ஆம், ஒரு நாட்டின் தலைவன் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை விட, சிறந்த உதாரணம் வேறு யாருமாக இருக்க முடியாது.

உண்மை. பிரதமர் நரேந்திர மோடி இந்துத்துவவாதி. அவரின் பாரதிய ஜனதாக் கட்சி இந்துத்துவக் கட்சி என்று பலரும் பிதற்றிக் கொள்வர். அதிலும் தமிழகத்தின் திராவிட முன்னேற்றக் கழகம் இந்து சமயத்தை அழிப்பதையே நோக்கமாகக் கொண்டது.

சனாதன தர்மத்தை ஒழிக்க வேண்டும் என தமிழக முதலமைச்சர் ஸ்ராலினின் மகன் உதயநிதி ஸ்ராலின் அண்மையில் கூறி, பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தார்.

தவிர, அயோத்தி இராமர் கோவில் கும்பாபிஷேகத்தை தமிழகத்திலுள்ள ஆலயங்களில் நேரடி ஒளிபரப்புச் செய்வதற்கும் தமிழக அரசு தடை விதித்திருந்தது.

அயோத்தியில் இருந்த, முஸ்லிம் மக்களின் வழிபாட்டுத் தலமான பாபர் மசூதியை உடைத்து அதில் இராமருக்கு ஆலயம் அமைத்தது குற்றம் என்பது போல காட்டிக் கொண்டு இஸ்லாமிய மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் சூழ்ச்சி செய்தது.

அயோத்தி இராம ஜென்ம பூமி. இராம பிரான் அவதரித்த இடத்தில் இருந்த இராமர் ஆலயத்தை இஸ்லாமிய மன்னர்கள் உடைத்து அந்த இடத்தில் மசூதியை அமைத்திருந்தனர் என்பதுதான் வரலாறு.

இந்நிலையில் அயோத்தியில் ஆதியில் யாருடைய ஆலயம் இருந்ததோ, அவர்கள் சார்ந்த சமயத்தவர்களுக்கே அந்த இடம் சொந்தம் என்று; இந்திய உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கமைய அயோத்தியில் இராமர் ஆலயம் அமைக்கப்பட்டு, அண்மையில் அந்த ஆலயம் பிரதமர் நரேந்திர மோடியால் பிராண பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது.

அயோத்தி இராமர் ஆலயத்தின் மூலம் பிரதமர் மோடி இஸ்லாமியர்களுக்கு எதிரானவர் எனக் காட்டுவதற்கு இந்திய காங்கிரஸ் உள்ளிட்ட இந்திய எதிர்க்கட்சிக் கூட்டணிகள் கடும் பிரயத்தனம் செய்தன.

ஆனால் அவர்களின் பிரயத்தனம் அத்தனையும் தவிடுபொடியாகும் வகையில், இஸ்லாமிய நாடான அபுதாபியில் 27 ஏக்கர் நிலப்பரப்பில் கிருஷ்ண பரமாத்மாவுக்கு மிகப் பிரமாண்டமான இந்து ஆலயம் அமைக்கப்பட்டு நேற்றைய தினம் (14) பிரதமர் நரேந்திர மோடியால் அந்த ஆலயம் திறந்து வைக்கப்பட்டது.

ஆலயத் திறப்பு விழாவுக்குச் சென்ற பிரதமர் மோடிக்கு அபுதாபி மன்னர் மிகப் பிரமாண்டமான வரவேற்பை வழங்கியிருந்தார்.

இங்குதான் பிரதமர் மோடி தான் யார் என்பதை நிரூபித்துள்ளார்.

ஒரு நாட்டின் தலைவன் ஏனைய நாடுகளுடன் பகை கொள்ளாமல், அன்பால் ஆட்கொள்ள வேண்டும். அதைப் பிரதமர் மோடி செய்துள்ளார்.

அதனாலேயே ஓர் இஸ்லாமிய நாட்டில் இந்துக் கோயிலை அமைக்க அவரால் முடிந்தது. அத்துடன் பிரதமர் மோடி இஸ்லாமியர்களின் மிக நெருங்கிய நண்பர் என்பதும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

# நிறைவேற்று அதிகார முறையை இல்லாதொழிக்க முடியாது

## ராஜித சேனாரட்ண எம்.பி

(கொழும்பு)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை சுலபமாக இல்லாதொழிக்க முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

சமூக நீதிக்கான அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பது குறித்து யாரும் காலக்கெடுவை நிர்ணயிக்க வேண்டாம் எனவும் கூறியுள்ளார்.

பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் பல்கலைக்கழக விரிவுரையாளராக கடமையாற்றிய 1978 ஆம் ஆண்டில் இந்த முறையை இரத்துச் செய்யுமாறு கோரி அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவிடம் தாம் அடி வாங்கியதாகவும், அந்த காலம் முதல் இந்த காலம் வரையில் தாம் மாறவில்லை எனவும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்பதே தமது நிலைப்பாடு எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இரத்து செய்வதற்கு இரண்டு கரங்களையும் உயர்த்தி ஆதரவளிக்கத் தயார் எனவும், பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்கத் தயார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதானால் ஏன் கோடிக்கணக்கில் செலவழித்து ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டுமெனவும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

இருப்பினும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இரத்து செய்யப்படும் என தாம் நினைக்கவில்லை எனவும் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். (ம-7)

## திடீர் சுகயீனம் காரணமாக 18 மாணவர்கள் வைத்தியசாலையில்

(கொழும்பு)

வெல்லவாய - மல்வத்தாவல பகுதியில் உள்ள ஆரம்பப் பாடசாலையில் கல்வி கற்கும் 18 மாணவர்கள் திடீர் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவம் நேற்று புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

குறித்த பாடசாலையின் 5 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களே இவ்வாறு திடீர் சுகயீனமடைந்துள்ளனர்.

மாணவர்கள் தோல் அரிப்பு மற்றும் உடலில் தழும்புகள் ஏற்பட்டு சுகயீனமடைந்துள்ளனர்.

இதனையடுத்து மாணவர்கள் வெல்லவாய ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டுள்ள நிலையில், எவ்வித பாரதூரமான பாதிப்பும் இல்லை என வெல்லவாய ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் தெரிவித்துள்ளார். (ம-7)

## 124 கோடி ரூபா நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு நட்டம்

(கொழும்பு)

நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு 124 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கணக்காய்வாளர் அலுவலகம் வெளியிட்டுள்ள புதிய அறிக்கைக்கு இணங்க 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டு இந்நட்டம் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நெல் சந்தைப்படுத்தும் சபை, திறைசேரிக்கு கடந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் 664 கோடி ரூபாவை செலுத்தவேண்டியிருந்தது.

இந்தத் தொகை செலுத்தப்படவில்லையென்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## ஜனாதிபதி நிதியத்தின் இணையத்தளம் புதுப்பிப்பு

ஜனாதிபதி நிதியத்திற்காக (https://www.presidentsfund.gov.lk) புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இணையத்தளத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றுமுன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் .சமன் ஏக்கநாயக்க தலைமையில் இடம்பெற்றது.

இந்த மைல்கல், மருத்துவ உதவிக்கான விண்ணப்பத்தைப் பதிவிறக்குவதற்கான விருப்பத்துடன், ஜனாதிபதியின் நிதியத்தால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பான புதுப்பிக்கப்பட்ட தகவல்களை மூன்று மொழிகளிலும் பொது அணுகலை வழங்குகிறது.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளரும் ஜனாதிபதி நிதியத்தின் செயலாளருமான சரத் குமார், ஜனாதிபதி நிதியத்தின் பிரதிப் பணிப்பாளர்.கயான் மொரலியகே மற்றும் பலர் கலந்துகொண்டனர். (ம-7)

## பொருளாதார நெருக்கடியால் மாணவர்கள் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி நிலைமையால் மாணவ சமூகத்தின் 3 சதவீதமானோர் கற்றல் நடவடிக்கைகளில் இருந்து முற்றாக விலகியுள்ளதாக தேசிய தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், பொருளாதார நெருக்கடி காரணமாக பாடசாலை மாணவர்களில் 54.9 சதவீதமானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக தேசிய தொகை மதிப்பு மற்று புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அவர்களில் 53.2 சதவீதமானோர், பாடசாலைக்கான புதிய உபகரணங்களை கொள்வனவு செய்வதை முற்றிலும் நிறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 44 சதவீதமான மாணவர்கள் புதிய பாடசாலை சீருடைகளுக்கான செலவை குறைத்துள்ளதாகவும் தேசிய தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அத்துடன் 40.6 வீத மாணவர்கள் மேலதிக வகுப்புகளில் பங்கேற்பதை நிறுத்தியுள்ளனர்.

அவர்களில்; 28.1 சதவீதமானோர் மேலதிக வகுப்புகளை இணைய வழி மூலம் மேற்கொள்வதாக தேசிய தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை **காலை 08:30 மணியிலிருந்து மாலை 5:00 மணி வரை வவுனியா பிரதேசத்தில்** அரசன் அரிசி ஆலை எனும் இடத்தில் மின்விநியோகம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

02



மொழி நாகரிகத்தைக் கண்டுபிடிப்பதற்கு மனித இனம் என்ன பாடுபட்டிருக்கும். இன்பமாக மனிதர்கள் ஆடியும் பாடியும் பொழுது போக்கிக் கொண்டிருந்த நிலையிலிருந்து தான் மொழி தோன்றியிருக்க வேண்டும் என்கிறார், மேலை நாட்டு அறிஞர் ஒருவர். மொழி தோன்றுவதற்கு முன் சைகைகளாலும், பல்வேறு குறியீடுகளாலும் மனிதர்கள் கருத்தைப் புலப்படுத்தியிருக்க வேண்டும். அறிவு இல்லாமல் மொய்த்துக் கிடந்த மனிதக் கூட்டம் என்ற வெள்ளத்தின் மேலே செந்தாமரைக் காடு பூத்தது போல் மொழி பூத்தது என்கிறார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

### மொழி பற்றிய விளக்கம்

ஒரு வகுப்பினர் அல்லது ஒரு நாட்டினர் தம் கருத்தைப் பிறருக்குப் புலப்படுத்துதற்கு ஒரு கருவியாகக் கொள்ளும் ஒலித்தொகுதியே 'மொழி' என்பார் பாவாணர். நம் மனத்தின் உள்ளே, ஏதாவது ஒன்றைப் பற்றிச் சிந்திப்பதும் மொழியின் ஒரு நிலை ஆகும். பலர் சேர்ந்து ஓர் இனமாக வாழ்கிறார்கள் என்பதற்கு அவர்களின் நிறமோ, பழக்கவழக்கங்களோ காரணமில்லை அவர்கள் ஒரு மொழிபேசுவோராக இருப்பது தான் காரணமாகும் என்பர். எனவே மொழி என்பது ஓர் இனத்தின் புற அடையாளம் எனலாம்.

மொழிதல் என்றால் சொல்லுதல் என்பது பொருள். பேச்சு மொழியே முதலில் தோன்றியது. பேசப்படுவதும் கேட்கப்படுவதுமே உண்மையான மொழி ஆயினும் எழுதப்படுவதும் படிக்கப்படுவதும் அடுத்த நிலையில் வைத்துக் கருதப்படும் மொழியாகும். இவைகளே அன்றி வேறு வகை மொழி நிலைகளும் உண்டு. எண்ணப்படுவது, நினைக்கப்படுவது, கனவு காணப்படுவது ஆகியவைகளும் மொழியே ஆகும்' என்று அறிஞர் மு. வரதராசனார், கூறுகிறார்.

எனவே மொழி என்பதைப் பேச்சு, எழுத்து, எண்ணம் என்றும் பல நிலைகளில் அறியலாம். ஒலி வடிவான குறியீடுகளைக் கொண்டது பேச்சு மொழி வரி வடிவான குறியீடுகளைக் கொண்டது எழுத்து மொழி ஆகும்.

மொழி ஒலிகளால் ஆனது. ஒலிகளைக் கொண்டு சொற்களும், சொற்களைக் கொண்டு தொடர்களும் வளர்க்கப்படுகின்றன. மனிதன் தான் கூறும் பொருள் பொதிந்த ஒலிகளை எப்படி மாற்றி அமைத்தாலும் அதனை பகுத்துப் பொருள் கூறமுடியும். ஆனால் விலங்குகள் எழுப்பும் ஒலிகளை இவ்வாறு பகுத்துக் கூறல் இயலாது.

ஒலிகளையும், சொற்களையும் பல்வேறு வகையில் இணைப்பதன் மூலம் புதிய சொற்களையும் தொடர்களையும் மனித மொழியில் உருவாக்க இயலும். இலக்கண நியதிகளை மனதில் கொண்டு ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு நாளும் புதிய சொற்றொடர்களை மொழியில் படைக்க முடிகிறது. மொழியின் அமைப்பைக் கொண்டு அதில் பலவேறு விதமான மாற்றங்களைக் கொண்டு வரமுடியும்.

ஒலிகளையும், சொற்களையும் கொண்டு அவற்றை பல தரப்பட்ட முறையில் கையாளுவதன் மூலம் நாம் புதிய சொற்கள், சொற்றொடர்களை உருவாக்க முடியும். இதனடிப்படையில்தான் இன்று மொழியில் பல்வேறு வகையான புதுமைச் சொற்களும் வாக்கியங்களும் உருவாக்கப்பட்டும், படைக்கப்பட்டும் வருகின்றன.

காலத்திற்கு ஏற்றவாறு மாற்றங்கள் நிகழ்ந்தால் மட்டுமே மொழியானது நிலைத்து நிற்கும். மனித சமுதாயத்தின் மாறுதலுக்கு ஏற்றவாறு மொழியிலும் மாற்றம் நிகழ்கின்றன.

மொழி என்பது ஒரு சமூகம் மட்டுமல்ல, ஒரு சமூகத்தின் பண்பாட்டைப் பாதுகாக்கும் கருவியும் கூட. ஒரு சமூகத்தின் பல்வேறு வகையான பண்பாட்டுக் கூறுகளும், வாழ்வியல் சிந்தனைகளும், தத்துவங்களும் அந்தந்த சமூகத்தின் பாரம்பரியத்தைப் பறைசாற்றுகின்றன.

மொழியின் இலக்கணக் கட்டமைப்பு சமுதாய உறவுகளைச் சுட்டுகின்றன. வணங்குதல், மரியாதையாகப் பேசுதல், நன்னடத்தை, மொழி பற்றிய நன்னெறிகள், மொழிசார்ந்த வழக்குகள் இவை அந்தந்தச் சமூகத்தின் பண்பாட்டை வெளிப்படுத்தி நிற்கின்றன.

மொழி கருத்தை உணர்த்துவதால் ஒருவரை ஒருவர் தெரிந்து கொண்டு கூட்டமாக ஒன்று பட்டு வாழ்வதற்கு உதவுகிறது. மக்களின் நாகரிகம், பண்பாடு, கலை, வாழ்வு இவற்றிற்கெல்லாம் அடிப்படையாக விளங்கி தனிப்பட்டவர் வாழ்வைச் சமுதாயத்தோடு பிணைக்கின்றது. கருத்துப் பரிமாற்றம் நிகழவில்லையெனில் சமுதாயம் எனும் அமைப்பே நிலைத்து நிற்க முடியாது.

எனவே, மொழியையும் சமூகத்தையும் பிரிக்க முடியாது. சமுதாயம் இல்லாமல் மொழி இல்லை. ஒரு மொழி வளர வேண்டுமானால் அம் மொழி பேசும் சமுதாயம் வளர வேண்டும். மொழிப் பயன்பாடுகள் சமுதாயத்தின் சூழ்நிலைக்கு ஏற்றவாறுமாறு படுவதையும் காண முடிகிறது. வழிவழியாக வரும் சிந்தனைகள், பண்பாட்டுப் பழக்க வழக்கங்கள் இவற்றை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வதற்கும் மொழியே அடிப்படையாக விளங்குகிறது.

ஒரு சமூகத்தின் கலாசாரம் எந்த அளவிற்கு மேன்மையும் தொன்மையும் கொண்டது என்பதற்கான குறியீடாக பார்க்கப்படுவதும் மொழியே. ஒரு மொழி பேசுபவர்கள்மீது இன்னொரு மொழியை திணிக்க முயல்வது என்பது வெறுமனே மொழியை திணிப்பது மட்டுமல்ல, மொழித் திணிப்புக்குள்ளாவோரை இரண்டாந்தர மூன்றாந்தர குடிமக்களாக மாற்றிவிடும் முயற்சியே அது.

அங்கு திணிக்கப்படுவது மொழி மட்டுமல்ல கலாசாரமும் தான். மொழித் திணிப்பின் மூலம் கலாசார போராக தொடங்கி ஆயுதப்போராக பரிணமித்த போர்கள் ஏராளம். உலகில் நடைபெற்ற பல போர்களுக்கு காரணமாக இருந்ததும் மொழிதான். ஒரு மொழியை மற்றொருவர் மீது திணிக்க முயல்வதும் திணிப்புக்கு உள்ளாவோர் அதை தடுக்க முயல்வதும் அதற்காக போரிடுவதும் ரத்தம் சிந்துவதும் என மொழியினால் சிவப்பு நிறத்தில் எழுதப்பட்ட உலக சரித்திரத்தின் வரிகள் ஏராளம்.

கால் நூற்றாண்டுகாலமாக தெற்காசியாவையே பதற்றப்பட வைத்த ஈழத்தமிழர் போராட்டத்திற்கு அகரமாக இருந்ததும் மொழி பிரச்சினைதான். 1956 ஆம் ஆண்டு சிங்களத்தை ஆட்சி மொழியாக அறிவிக்க இலங்கை அரசு எடுத்த முயற்சிகளை எதிர்த்து தந்தை செல்வா தொடங்கிய போராட்டமே பின்னர் ஆயுத புரட்சியாக பரிணாமம் பெற்று வங்காள விரிகுடாவை செங்கடலாக மாற்றியது.

மனிதன் தோன்றிய பொழுதிலிருந்து தன் கருத்தை மற்றவர்க்கு உணர்த்தவும் தன் தேவையைப் பிறருக்குத் தெரிவிப்பதற்கும் கையாண்ட மொழி சைகைமொழியே. சுற்றுப் புறச்சூழல் மற்றும் பருவமாற்ற சூழலினால் மனிதன் குரல் மூலம் கருத்துப் பரிமாற்றம் செய்தான். இவ்வாறு படிப்படியாகவே மொழியானது வளர்ச்சி நிலையில் சென்றிருக்க வேண்டும் என்ற கருத்தும் நிலவுகின்றன.

மழலை மொழி என்பது குழந்தைக்கு இயற்கையாகவே அமைந்த ஒன்றாகும். ஆனால் பிறக்கின்ற குழந்தையானது தான் வளர்கின்ற சூழலில் தான் மொழியைக் கற்றுக் கொள்கிறது. இந்த நிலையில் குழந்தையானது எத்தனை மொழியானாலும் அது புரிந்து கற்றுக் கொள்கிறது. ஏனென்றால் சமுதாயத்தோடு மொழி இரண்டறக் கலந்து விட்டது.

பறவைகளும், விலங்குகளும் ஒலிகள் செய்யுமாயினும் அவ்வொலிகள் பொருளற்றன. அவை ஒலி மூலம் அச்சம், ஓசை முதலியவற்றைத்தெரிவிக்கும். ஆனால், அவை கருத்துக்களைத் தெளிவாகத் தெரிவிக்க முடியாது. மனிதன் மட்டுமே தன் உணர்ச்சியையும், கருத்தையும் பிறர்க்குத் தெரிவிக்கக் கூடியவனாயுள்ளான். மனிதர்களுக்குள் தொடர்பு உண்டாவதற்கு மொழியே அடிப்படை.

மொழி என்பது மனிதனுக்கு இயற்கையாக அமைந்த ஒன்றன்று மனிதன் தான் அமைத்துக் கொண்ட ஒரு கருவியாகும். மனிதர்கள் இன்ன ஒலித் தொகுதிக்கு இன்ன பொருள் என்று முடிவு செய்வதால் மொழி உண்டாகிறது.

பேச்சு மொழி போன்றே எழுத்து மொழியும் ஒரு செயற்கைப் பொருளே. அதாவது இன்ன ஒலிகளுக்கு இன்ன உருவங்கள் என்று மக்கள் முடிவு செய்து அமைத்ததாகும்.

### மொழியின் தோற்றம்

மொழியின் தோற்றம் குறித்த ஐவகைக் கோட்பாடுகள் மேலைநாடுகளில் கூறப்படுகின்றன. ஆட்டோ ஜெஸ்பர்சன் தம்முடைய நூலில் இவற்றை விளக்கியுள்ளார். அவை போலி மொழிக் கொள்கை, உணர்ச்சி மொழிக் கொள்கை, பண்பு மொழிக் கொள்கை, தொழில் ஒலிக்கொள்கை, இன்பப்பாட்டு மொழிக் கொள்கை ஆகும். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்தங்களுடன்...

ளார்.

குறித்த சட்டமூலத்தில் புதிய திருத்தங்களை மேற்கொள்ள இன்னும் ஒரு மாத காலம் ஆகுமெனவும் அதுவரையில் குறித்த சட்டம் நடைமுறையில் இருக்குமெனவும் அவர் தெரிவித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சினால் உரிய திருத்தங்கள் சமர்ப்பிக்கப்படுமென நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும் அமைச்சரவையில் 30இற்கும் மேற்பட்ட திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட் டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

பல்வேறு தரப்பினரின் எதிர்ப்பை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சமூக ஊடக வலையமைப்புகளுடன் தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக இந்த திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)


லக்கி 7 VIP
திகதி 2024.02.14
சீட்டிழுப்பு இலக்கம் 0216
C 2 8 8 1 9 2 C

தன நிதானய
திகதி - 2024.02.14
சீட்டிழுப்பு இலக்கம் - 1420
I 03 50 57 71 I
46622

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3632
சீட்டிழுப்பு திகதி 14.02.2024
M 23 26 43 69
M 14735

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.02.14
சீட்டிழுப்பு இலக்கம் 0699
விருச்சிகம் 13 19 25 47 விருச்சிகம்
23325 29

மஹஜன சம்பத
திகதி 2024/02/14
சீட்டிழுப்பு இலக்கம் 5390
Z 7 7 9 7 9 9

மெகா பவர்
திகதி 14/02/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1738
Z 17 04 08 26 52
28727


## துப்பாக்கி...

குளத்தினைச் சேர்ந்த துரைராசா ஆனந்தராசா (வயது-48) என்பவரே உயிரிழந்துள்ளார்.

வேட்டைக்கு சென்ற குறித்த நபர் காட்டிற்குள் சட்டவிரோத துப்பாக்கி வெடித்ததில் படுகாயமடைந்த நிலையில் அவருடன் வேட்டைக்கு சென்றவர்களால் மீட்கப்பட்டு கொண்டு வரப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு சென்ற முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,299)

## கட்டுப்பாட்டை...

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற் குட்பட்ட நாவற்குழிப் பகுதியில் ஏ9 வீதியில் நேற்று புதன்கிழமை பிற்பகல் மோட்டார் சைக்கிளுடன் மோதி இ.போ.ச பேருந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

மோட்டார் சைக்கிளை விலத்திச் செல்ல முற்பட்ட பேருந்து மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு பின்னர் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இருப்பினும் தெய்வாதீனமாக மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் மற்றும் பேருந்தில் பயணித்தவர்களுக்கு பாரிய பாதிப்புக்கள் எவையும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30,100)

## இணுவிலில்...

நேற்று மாலை 6.15 மணியளவில் கோண்டாவில் காரைக்கால் சிவன் கோவிலை அண்மித்த இணுவில் கிழக்கு புகையிரதக் கடவையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த வானில் கணவன், மனைவி, பிள்ளை என மூவர் பயணித்துள்ளனர்.

விபத்தில் இணுவில் பகுதியை சேர்ந்த 32 வயதுடைய சயந்தன் மற்றும் அவரது மகளான 6 மாத குழந்தை அப்சரா ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

விபத்து இடம்பெற்ற இடத்தில் புகையிரதக் கடவைக் காப்பாளர் இல்லாததே விபத்துக்குக் காரணம் என பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் மனைவி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33,60)

## அபு தாபியில்...

அபு தாபியில் இந்துக் கோவிலை திறந்து வைத்தார் பாரதப் பிரதமர் மோடி.

இந்திய பிரதமர் மோடி கடந்த 2015ம் ஆண்டு அரசுமுறைப் பயணமாக ஐக்கிய அரபு அமீரகத்திற்கு முதல் முறையாக பயணம் மேற்கொண்டார்.

அப்போது அமீரகத்தில் வசிக்கும் இந்திய இந்து மக்களுக்காக மோடியின் வேண்டுகோளை ஏற்று அபு தாபியில் இந்துக் கோவில் கட்டுவதற்கு அமீரக அரசு அனுமதி அளித்தது.

இதையடுத்து டுபாய் - அபு தாபி ஷேக் ஜாயித் சாலையில் உள்ள அல் ரக்பா அருகே முரைக்கா பகுதியில் இந்து கோவில் கட்ட 55 ஆயிரம் சதுர அடி இடம் அபு தாபி அரசு சார்பில் ஒதுக்கப்பட்டது.

2018ஆம் ஆண்டு கோவில் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டது. பிரதமர் மோடி டுபாயில் இருந்து காணொலி காட்சிமூலம் அடிக்கல் நாட்டு விழாவை தொடங்கி வைத்தார்.

இதையடுத்து, கடந்த சில ஆண்டுகளாக நடைபெற்று வந்த கோவில் கட்டுமான பணிகள் நிறைவடைந்தது.

இந்நிலையில், அபு தாபியில் கட்டப்பட்டுள்ள இந்து கோவிலை பிரதமர் மோடி நேற்று திறந்து வைத்தார். இரு நாள் பயணமாக ஐக்கிய அரபு அமீரகம் சென்றுள்ள பிரதமர் மோடி அபு தாபியில் இந்துக் கோவிலை திறந்து வைத்தார்.

கோவிலை திறந்து வைத்த பிரதமர் மோடி அங்கு நிறுவப்பட்டுள்ள நாராயணன் சிலைக்கு பூஜை செய்தார். (ம-7)

## சுகா...

வுடன் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

இதனை அடுத்து, தமது கொடுப்பனவுகளில் உள்ள முரண்பாடுகள் தொடர்பாக ஆரம்பிக்கப்பட்ட தொடர்ச்சியான பணிப் பகிஷ்கரிப்பை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு 72 சுகாதார தொழிற் சங்கங்களும் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.(ம-7)

*(முன்னர் வந்த செய்தி உள்ளே)*

## நயினா...

சுற்றுலா சென்ற பிரஸ்தாப இளைஞர் கடந்த 11ஆம் திகதி அங்குள்ள ஏரியொன்றில் நீராடியபோது நீரில் மூழ்கி காணாமல் போயிருந்தார்.

இந்நிலையில் அங்கு நடத்தப்பட்ட தேடுதலின் போது நேற்று முன்தினம் (13) அவரது சடலம் கண்டெடுக்கப்பட்டது. (ம)

## தமிழ...

பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், சாள்ஸ் நிர்மலநாதன் ஆகிய இருவரும் இணைந்து, நேற்று முன்தினம், கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் இரா. சம்பந்தனை சந்தித்துக் கலந்துரை யாடியபோதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமைப் பொறுப்பை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்வதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், நிர்வாகிகள் தெரிவு தொடர்பில் இணக்க அடிப்படையில் எட்டப்பட்ட முடிவுகளை பொதுச்சபை அங்கீகரிக்காதவிடத்து, அல்லது அத்தெரிவுகளில் குழப்பங்கள் நிலவுமிடத்து, தேர்தல் முறைமை மூலம் தெரிவுகளை நடத்தி, அன்றையதினமே மாநாட்டையும் நடத்துமாறு அவர் மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி 14.02.2024 வெற்றி வாரம் 098 வர்ணம் பசுமை
P 7 4 3 1 4 5
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 29,025,128.00
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2364 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.02.14 தினம் புதன்கிழமை
19 34 44 75 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 72,594,633.60

சனிதா
திகதி 2024.02.14 வெற்றி வாரம் 4525
18 38 49 63 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4076 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2024.02.14 தினம் புதன்கிழமை
20 36 43 59 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,441,506.40

I 36 20 45 56 67
1540
14.02.2024 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 506,076,358.20

ஜயோதா
திகதி 2024.02.14 வெற்றி வாரம் 2000 வர்ணம் மஞ்சள்
09 11 25 43 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 21,980,730.00

ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2190
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 91,188,442.40
சீட்டிழுப்பு திகதி : 2024.02.14
10 17 29 36 Y


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Canada & UK Visa

சகல ஆவணங்களும்
சட்ட வல்லுனர்
ஆலோசனையுடன்
செய்து கொடுக்கப்படும்.
முறையான ஆவணங்கள்
இல்லாதவர்களுக்கும்
நாம் பெற்றுக்கொடுப்போம்.

**Expo Net Overseas Consultants**
345, Kasthuriyar Road,
Jaffna.

021 222 5686
071 415 0995
021 435 5113

(19117)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-8351)

076 825 7716 (ஆகாஸ்)

## யாழ். கச்சேரிக்கு அருகில் காணி உடன் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3 1/2 பரப்புக் காணி, இரண்டு வெட்டுக் கிணறுகளுடன் உடன் விற்பனைக்கு உண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு அருகில் - கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது.
மொத்தமாக 55 மில்லியன் (5 கோடியே 50 லட்சம்)
(கிழமை நாட்களில் பார்வையிடலாம்)
தொடர்புகளுக்கு :
+447963743585(Whatsapp)
021 222 7141(Srilanka)
E.mail : Jamesraj_uk@yahoo.co.uk

(18948)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## காணி விற்பனைக்கு

புத்தூர் மட்டுவில் பிரதான வீதியோரம் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 20 அடி பாதையுடன் காணித்துண்டுகள் விற்பனைக்கு உண்டு.
180 பரப்பில் 51 பரப்பு விற்பனையாகியுள்ளது.
**1 பரப்பு - 2 1/2 இலட்சம்**

(18975)

பார்வையிடும் நேரம் :
காலை 8.30 தொடக்கம் 6.00 வரை

மேலதிக விபரங்களுக்கு 074 260 0617, 076 659 0583, 076 109 8504

இணுவில் திருப்பதி
## அருள்மிகு திருவேங்கடேஸ்வரர் ஆலய
## ரத ஸ்பதமி சூரிய உற்சவம் - 2024



காலம் : 16.02.2024 வெள்ளி காலை 6.00 மணிக்கு
புதிய சூரிய ரதத்தில் எழுந்தருளி அருட்காட்சி, சூரிய நமஸ்காரம், தொடர்ந்து சூரிய ரத பவனி
குறிப்பு: புதிய சூரிய ரத வெள்ளோட்டம் 15.02.2024 வியாழக்கிழமை இரவு 8.03 மணி

021 224 2300

ஆலய தர்மகர்த்தா - ச.கணேசலிங்கம்

(19123)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org